www.padippakam.com

1 ஆகஸ்டு 95 ❑ ரூ 3.00

# புதிய ஜனநாயகம்

## அரசியலில் சோனியா அருகதை என்ன



படிப்பகம்

www.padippakam.com

# ரவுடி ராஜ்யம் போலீசு உடந்தை

சென்னை - சேத்துப்பட்டில் கடந்த ஜூன் மாதம் 10-ந்தேதி இரவு ரவுடி ராஜா குடித்துவிட்டு, பகுதி குடிநீர் - சுகாதார பிரச்சினையையொட்டி பு.மா.இ.மு.வினர் கட்டியிருந்த தட்டியைக் கத்தியைக் கொண்டு கிழிக்க முயன்றிருக்கிறான். இதை தி.மு.க.வைச் சேர்ந்த ஜனநாயக உணர்வு கொண்டவரான அழகுராஜா தடுத்துள்ளார். இதனால் ஆத்திரம் கொண்டு அழகுராஜாவைக் கத்தியால் குத்த வந்த ரவுடி ராஜாவைப் பொதுமக்களே அடித்துத் துரத்தி விட்டனர். ஆனால் மறுநாள் ஜூன் 11-ந் தேதி இன்னும் சில ரவுடிகளை அழைத்துக் கொண்டு, பூந்தமல்லி சாலையில் நடந்து வந்த அழகு ராஜாவை வழி மறித்து, சரமாரியாக கத்தியால் குத்தி விட்டு தப்பி ஓடி விட்டான் ரவுடி ராஜா. மருத்துவமனைக்கு எடுத்துப்போகும் வழியிலேயே பரிதாபமாக இறந்து போனார் அழகுராஜா.

இந்த ரவுடி ராஜா இறந்து போன அழகுராஜாவின் சித்தி மகன் - நெருங்கிய உறவினன்; இவர்களின் இரு குடும்பத்தாருக்கும் இடையே நெடு நாட்களாகவே சொத்து தகராறும் இருந்து வந்திருக்கிறது. இதற்காகவே அழகு ராஜாவைப் பழி வாங்க வேண்டுமென்று கூறி வந்திருக்கிறான், ரவுடி ராஜா. மேலும் அவர், இவனது அராஜக — ரவுடித்தனங்களையும் தட்டிக் கேட்கவே சமயம் பார்த்து வம்புக்கிழுத்து தனது பழி வாங்கும் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான் ரவுடி ராஜா.

போலீசார் ரவுடி ராஜாவை இன்னும் கைது செய்யவில்லை. அவனது கோஷ்டியைச் சேர்ந்த வேறு இரு ரவுடிகளைத் தான் கைது செய்துள்ளனர். ரவுடி ராஜா தலைமறைவாக இருந்து கொண்டு பகுதியைச் சேர்ந்த வேறு சிலரையும் கொலை செய்யப் போவதாகவும் மிரட்டி வருகிறான். பகுதி மக்களுக்கு போலீசும் பாதுகாப்பு தராத நிலையில் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களே ரவுடி ராஜாவுக்கு எதிராக ஒன்றிணைந்திருக்கின்றனர். பு.மா.இ.மு. இப்படுகொலையைக் கண்டித்து மறுநாளே சுவரொட்டிகள் ஒட்டியதோடு, ரவுடி ராஜ்ஜியத்திற்கு எதிராகப் பொதுமக்கள் அமைப்பாக செயல்பட வேண்டியதை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வருகிறது.

தகவல்: பு.மா.இ.மு., சென்னை.

# காலணித் தொழிலாளர் சங்கம் உதயமானது

காட் ஒப்பந்தம் மற்றும் தாராளமயமாக்கலின் பாதிப்புகள், குடிசைத் தொழிலாக செருப்புகள் தயாரித்து சிறு வியாபாரிகளிடம் விற்று வாழ்க்கை நடத்தி வரும் காலணித் தொழிலாளர்களைத் துடைத்தெறிந்துவிடும் அபாயகரமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. ''காட்'' ஒப்பந்தத்தின் பின் இரப்பர் ஏற்றுமதி கூடியதால் உள்நாட்டில் அதன் விலை கடந்த ஒரே வருடத்திற்குள் ஒரு டன்னுக்கு 26,000 ரூபாயிலிருந்து 64,000 ரூபாயாக உயர்ந்து விட்டது; இதனால் காலனி தயாரிப்புக்குப் பயன்படும் இரப்பர் ஷீட்டுகள், பக்குவம் செய்யப்பட்ட இரப்பர் பால், தோல் அனைத்தும் இன்று 50-லிருந்து 200 மடங்காக விலை உயர்ந்துவிட்டன.

செருப்புக்கடை முதலாளிகள் செருப்பின் விலையைக் கூட்டி விற்றுப் பெரிதும் பாதிக்கப்படாமல் தப்பி விடுகின்றனர். ஆனால் காலணிகளைத் தயாரிக்கும் இத்தொழிலாளர்களோ அடிக்கடி விலையைக் கூட்ட இயலாது நஷ்டமடைந்து அல்லற்படுகின்றனர். இதனால் நாளொன்றுக்கு 12 மணி நேரத்துக்கு மேலாக உழைத்தும் 50 ரூபாய் கூட இவர்களால் சம்பாதிக்க முடிவதில்லை. இத்தொழிலாளர்களுள் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாதலால் அரசும் அதிகார வர்க்கமும் இவர்களின் பிரச்னைக்கு உரிய முக்கியத்துவமும் தருவதில்லை. மேலும் சிறு காலணி வியாபாரிகளைக் குறி வைத்து 100 கோடி ரூபாய் மூலதனத்தில் இத்தாலி நாட்டு நிறுவனமொன்று காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்கவுள்ளது. இது இத்தொழிலாளர்களின் பிழைப்பையே முற்றிலும் அழித்துவிடும்.

சங்கமாக ஒன்றிணையவில்லையென்றால் இந்த அவல நிலையை எதிர்த்துப் போரிட முடியாது என உணர்ந்து இத் தொழிலாளர்கள், கோவை மாவட்ட காலணி தொழிலாளர் நலச் சங்கத்தை அமைத்துள்ளனர்; தங்களின் பிரச்னைகளைத் தீர்க்கக் கோரி, வேலை நிறுத்தப் போராட்டமொன்றையும் நடத்தினர். கடந்த ஜூன் மாதம் 26-ந் தேதி தங்களின் தலைமை அலுவலகத் திறப்பு விழாவிற்கு கோவை பகுதி ம.க.இ.க. செயலர் நகீம் இக்மத் மற்றும் பா.ம.க., தலித் சேனா அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் அழைத்திருந்தனர். தோழர் நசீம் இக்மத்தும், கோவை மாவட்ட காலணி தொழிலாளர் நலச்சங்கத்தின் தலைவர் T.N. செல்வராஜூம் ''காட்''டின் அபாயம் குறித்துப் பேசினார்கள். சங்கப் பொருளாளர் R.S. மனோகர் காலணித் தொழிலாளர்கள் மிருகங்களை விட கேவலமாக வாழ்ந்து வருவதை எடுத்துக் கூறினார். 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

தகவல்: ம.க.இ.க., கோவை

# விலையேற்ற அறிவிப்பு

பத்திரிகை அச்சடிக்கும் உள்நாடு/வெளிநாடு தாளின் விலை ஒரு மடங்கு அதாவது 18,000 ரூபாயிலிருந்து 36,000 ரூபாய் என குறுகிய காலத்திற்குள் கூடிவிட்டது. கடந்த ஆண்டிலேயே எமக்கு விலையை கூட்டும் நெருக்கடி ஏற்பட்டு அவ்வாறு செய்ய மனமின்றி வடிவத்தில் மாற்றம் செய்தோம், 24 பக்க அளவில் சாதாரண தாளிலேயே அட்டையும் சேர்த்து வெளியிட்டோம். தற்போது 3 ரூபாயில் இந்த வடிவத்திலும் வெளியிட முடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வேறு வழியின்றி விலையில் 50 பைசாவை அடுத்த இதழிலிருந்து கூட்டுகிறோம். தொடர்ந்து ஆதரவு தரும்படி கோருகிறோம்.

- ஆசிரியர் குழு

# தவறுக்கு வருந்துகிறோம்

அன்பார்ந்த வாசகர்களே!

கடந்த 1 ஜூலை '95 இதழில் 7ம் பக்கத்தில் தி.க.-வீரமணியை அம்பலப்படுத்தி எழுதிய கட்டுரையில்... பெங்களூர் குணா எழுதிய நூல் ''திராவிடம் வீழ்ந்தது'' என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ''திராவிடத்தால் வீழ்ந்தோமா?'' என்பதே அவரது நூலின் தலைப்பு. எமது கவனக்குறைவில் நிகழ்ந்த இத்தவறுக்கு பெரிதும் வருந்துகிறோம்.

- ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

பத்தாம் ஆண்டு

**16 - 17**

1 - 31 ஜூலை '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தீராத நோய்

நாடு முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும், ''தண்டூரிக் கொலை'' நாடாளுமன்ற ஜனநாயக அரசியலின் இன்னொரு இழிநிலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. இளைஞர் காங்கிரசு பெண் பிரமுகரான நைனா சகாணி என்பவள் அடித்துக் கொல்லப்பட்டு, கண்ட துண்டமாக வெட்டி சுக்காரொட்டி சுடும் அடுப்பில் நெய்யூற்றி எரிக்கப்பட்டிருக்கிறாள். அரசுக்குச் சொந்தமான சுற்றுலாத்துறை ஓட்டலின் உணவு விடுதியில் அதை ஒப்பந்தத்திற்கு எடுத்து நடத்திக் கொண்டிருக்கும் டில்லி மாநகர இளைஞர் காங்கிரசின் முன்னாள் தலைவன் சுசில் சர்மாதான் இக்கொலையைச் செய்திருக்கிறான். பிரதானச் சாலையில் ''ரோந்து'' சுற்றிக் கொண்டிருந்த ஒரு போலீசுக்காரர், கொழுந்து விட்டெரியும் தீ அருகிலுள்ள பலமாடிக் கட்டிடத்தைப் பற்றிக் கொள்ளக் கூடாதென்று போலீசுக்கும், தீயணைப்புப் படைக்கும் செய்தி தந்து, தற்செயலாய் சோதனையிட்டபோது பிணத்தை எரிக்கும் குற்றத்தைக் கையும் களவுமாகப் பிடித்தார். அதுவும் யாரோ சமூக விரோதிகள், அடையாளம் தெரியாத பெண்ணைக் கற்பழித்து கொன்றதாகக் கருதி பத்திரிக்கைகளில் செய்தி பரவியதால், இதை மூடி மறைத்திட இயலாமல் போனது.

கொலை செய்து எரித்த இடத்தில் இருந்து தப்பிய சுசில் சர்மாவுக்கு மந்திரிக்கள், இளைஞர் காங்கிரசுப் பிரமுகர்கள் தஞ்சம் அளித்து, சென்னை கொண்டு வந்து, போலி முகவரியும் ஏற்பாடு செய்து, மாநகர ''நீதி'' மன்றத்தில் முன் ஜாமீனும் வாங்கித் தந்தனர். இதற்கிடையே இந்த வழக்கு நாடு முழுவதும் கவனத்தை ஈர்த்து, கடும் கண்டனத்துக்குள்ளான நிலையில் முன் ஜாமீனும் ரத்தாகி, வேறு வழியின்றி பெங்களூரில் போய் போலீசிடம் சரணடைந்துள்ளான், கொலைகாரக் காங்கிரசுக்காரன்.

ஆனால் அவன் கொடுத்த வாக்குமூலம், காங்கிரசுக்குள் புரையோடிப் போயிருக்கும் கோஷ்டித் தகராறுகள் ஆகியவை காரணமாக ஓரிருவர் மட்டுமல்ல, அந்தக் கட்சி முழுவதுமே இப்படிப்பட்ட பல கிரிமினல் குற்றவாளிகளின் கூடாரமாக இருந்து வருவது அம்பலமாகி நாடே நாற்றமடிக்கிறது. நைனா சகாணி உட்பட மேலும் பல பெண்களை மந்திரிகள், எம்.பிக்கள், கட்சித் தலைவர்கள், அதிகாரிகளுக்குக் கூட்டிக் கொடுத்து தொழில் உரிமங்கள் முதல் ''பெட்ரோல் - எரிவாயு'' விற்பனை உரிமம், தொலைபேசி வசதி, அரசுப் பதவிகள் போன்றவை பெற்று பெரும் பணம் சம்பாதிப்பதை ஒரு அரசியல் கிரிமினல் - விபச்சாரத் தொழிலாகவே சுசில் சர்மா நடத்தி வந்திருக்கிறான். இவனைப் போலவே பலரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், போதை மருந்து வியாபாரம், மிரட்டிப் பணம் பறிப்பது போன்ற வேறு பிற கிரிமினல் தொழில்களும் நடத்தி வருகின்றனர். தலைநகரில் மட்டுமல்ல; மாநில, மாவட்ட அளவிலும் இத்தகையவர்கள் கட்சி முழுவதும் நிறைந்துள்ளனர். அனைத்து மாநிலங்களிலும் குறிப்பாக, உ.பி; ம.பி., பீகார் மாநில சட்ட மன்றங்களிலும் பாதிக்கும் மேலானோர் கிரிமினல் குற்றப்பட்டியலில் உள்ளனர்; மந்திரிகளாகவும் உள்ளனர்.

இதற்காக காங்கிரசைக் குறை கூறும் அருகதை இல்லாதவாறு எதிர்க்கட்சிகளிலும் இதே நிலைதான் உள்ளது. அரசியல் கட்சிகள் பலவற்றில் உறுப்பினர்களாகவும், பிரமுகர்களாகவும் கெட்ட நடத்தையுள்ள பெண்களும், கிரிமினல்களும் காரியங்களைச் சாதிப்பதற்கு மிகவும் அவசியமாகி விட்டனர். இவர்களில் பலரும் அப்பாவிப் பெண்களை மிரட்டியும் மயக்கியும் விபச்சாரம், நீலத் திரைப்படம் எடுப்பது ஆகிய தொழில்களுக்குப் பயன்படுத்துகின்றனர். மராட்டிய மாநிலம் ஜல்கோனில் சிக்கிய இத்தகைய காங்கிரசு கும்பல், பஞ்சாபில் பிரெஞ்சுப் பெண்ணைக் கற்பழித்த மாநில முதல்வரின் பேரன் போன்ற பலரும் தண்டனையின்றித் தப்பி விட்டனர். பிரதமர், அரசுத் தலைவரின் வாரிசுகளுக்கு பிரபல நடிகைகளை அனுப்பி வைத்து, நீலப் படம் பிடித்து ஜெயலலிதா மிரட்டி வருவதாகக் கூட எழுந்துள்ள குற்றச்சாட்டு அமுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஜெயலலிதா - ஜானகி சக்களத்திச் சண்டையின் போது எம்.எல்.ஏக்களுக்கு விபச்சாரிகளை அனுப்பியதாக தூக்கிலிடப்பட்ட ஆட்டோ சங்கர் வாக்குமூலமளித்ததும் மூடி மறைக்கப்பட்டது. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மொத்தத்தில் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பே தீராத நோயினால் அழுகிப் போயுள்ளது. அது ஆங்காங்கே வெடித்து சீழ் வழியும் போது முடை நாற்றம் வீசுகிறது. சில விவகாரங்களில் நடவடிக்கைகள் எடுப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு வாசனைத் திரவியங்கள் தெளிக்கப்படுகிறது. நாடாளுமன்ற அரசியல்வாதிகள் மட்டுமல்ல, இந்தத் ''தண்டூரிக் கொலை''க் குற்றவாளிக்கு அவசர கோலத்தில் முன் ஜாமீன் வழங்கியதன் மூலம் நீதித்தறையின் அவலநிலையும் வெளிப்பட்டு விட்டது. முன் ஜாமீன் கோரி மனுப்போட்ட வக்கீல் வாதத்தை முடிக்கும் முன்னரே, பத்தே நிமிடங்களில் அவசர அவசரமாக ஒப்புதல் அளித்துள்ளார், உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளவர். பாசிச ஆட்சியாளர்களின் எடுபிடியான பி.எச். பாண்டியன், சேடப்பட்டி முத்தையாவை போல எப்படியும் தீர்ப்புக் கூறத் தனக்கு அதிகாரம் உண்டென்று திமிராகப் பேட்டி கொடுத்துள்ளார், அந்த ''நீதிபதி''. இந்த வழக்கு நாடு முழுவதும் கவனத்தை ஈர்த்து கண்டனத்துக்குள்ளாகி இருப்பதால் உயர் நீதி மன்றம் தலையீடு செய்து தானும் கண்டித்தது. ஆனால் ஒட்டுமொத்த சமூக அமைப்பு முழுவதும் பரவியுள்ள சீரழிவை இத்தகைய மேற்பூச்சு நடவடிக்கைகள் தடுத்திட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# சட்ட விரோதிகளின் ஆட்சி சட்ட அறிஞர்கள் கிளர்ச்சி

## கிரிமினல் அரசியலில் முடிசூடிய தலைவி ஜெயா

ஜெயலலிதாவிற்கு எதிராக ஊழல் வழக்கு தொடர இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக தி.மு.க. வழக்கறிஞர் சண்முக சுந்தரம் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்களால் கோரமாகத் தாக்கப்பட்டார். கை, கால்களை அசைக்க முடியாத அளவிற்கு வெட்டப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அமைச்சர் மதுசூதனின் வலது கரமான சேகர்பாபுவும் இவனால் நியமிக்கப்பட்ட வெல்டிங் குமார் என்கிற தாதா தலைமையிலான கூலிப்படையும் இக் கொலை வெறித் தாக்குதலில் தொடர்புடையவர்கள் என்பது நிரூபிக்கப்படாத உண்மை.

இது ஜெயலலிதாவின் பதவியை பாதுகாப்பதற்காக தொடுக்கப்பட்ட ஜனநாயக விரோத, அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட தாக்குதல் என்பதில் எவருக்கும் சந்தேகம் வராது. தன்னை எதிர்ப்பவர்கள் எவரையும் - தன்கட்சி எம்.எல்.ஏ.க்கள் முதல் மாணவர், தொழிலாளர், கவர்னர் வரை - விட்டு வைக்காது கொஞ்சம் கூட தயக்கமின்றி சட்டவிரோத முறைகளில் பழிவாங்கி வருகிறது, ஜெயா கும்பல். எதிர்ப்புகளை சமாளிக்க கத்தி, கம்பு, அழுகிய முட்டை - தக்காளி போன்றவைகள் மீதே நம்பிக்கை வைத்து இக்கும்பல் நிகழ்த்தும் அராஜகம், எல்லை மீறல்களுக்கு அளவே இல்லை. என்னை ஆட்டவும் அசைக்கவும் முடியாது என்று இறுமாப்புடன் இப்படி ஆட்டம் போடுவதற்கு ஜெயா கும்பல் கட்சி ரீதியாக உருவாக்கி வைத்திருக்கும் மாஃபியா - கிரிமினல் வலைப்பின்னல் கணிசமாக உதவி செய்கிறது. தமிழக அரசியலை அதிக அளவிற்கு கிரிமினல் மயமாக்கி அதன் முடிசூடிய தலைவியாக விளங்குகிறார், ஜெயலலிதா.

வழக்கறிஞர் சண்முக சுந்தரத்தை ரவுடிகளைக் கொண்டு தாக்கியதால் பிரச்சினை பெரிதாகி போராட்டங்கள் வலுத்த போதும் தனது சதிகள், ரௌடியிசத்தை ஜெயா கும்பல் தற்காலிகமாகக்கூட நிறுத்தி வைக்கவில்லை. போராடிய வழக்கறிஞர்கள் மத்தியில் ஊடுருவி பிளவை உருவாக்கி சீர்குலைவு வேலை செய்தது. ''பந்த்'' அன்று போராடுபவர்களுக்கு எதிராக அ.தி.மு.க. வழக்கறிஞர்களைக் கொண்டு உண்ணாவிரதம், ரகளை என்கிற முறையில் தாக்குதல் தொடுக்கவும் முயன்றது. இத்துணிவு பாசிஸ்டுகள் அல்லாமல் வேறு எவருக்கும் வராதுதான்.


நேற்று விஜயன் இன்று சண்முக சுந்தரம் என வழக்கறிஞர்கள் அரசியல் ரீதியாக தாக்கப்படுவது மட்டுமல்லாமல் உள்ளூர் ரவுடிகளாலும் பல வழக்கறிஞர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். செங்கல்பட்டில் ராதாபாய் என்ற பெண் வழக்கறிஞர் வீட்டிற்குள் புகுந்து அவரது தாயைக் கொன்று கொள்ளையடித்தது ரவுடிக் கும்பல். சென்னை - அசோக் நகரில் ரவுடியைத் தட்டிக் கேட்டதற்காக வழக்கறிஞர் சதீஸ் குத்திக் கொல்லப்பட்டார். சைதாப்பேட்டையில் ஒரு வழக்கறிஞர் போலீசால் அவமானப்படுத்தப்பட்டார். இதுபோன்ற பல சம்பவங்கள் சென்னை முதல் கன்னியாகுமரி வரை நடப்பதால் அதிருப்தியும் ஆத்திரமும் கொண்டிருந்த வழக்கறிஞர்கள் அவ்வப்போது கண்டனம் தெரிவித்தனர். ஜெயா ஆட்சியில் தமக்கு ஏற்பட்டுள்ள தொழில் பாதுப்பின்மை நிலைமையைக் கண்டு கனன்று கொண்டிருந்தவர்களுக்கு சண்முகசுந்தரம் தாக்கப்பட்ட சம்பவம் போராட தூண்டுகோலாக அமைந்தது.

தமிழகம் முழுவதுமுள்ள வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தை புறக்கணித்து போராட வீதிக்கு வந்ததும் ''பந்த்'' என்ற அளவிற்கு போராட்டம் நடத்தியதும் வரவேற்கத்தக்கது. ஜெயா ஆட்சிக் கொடுமைக்கு எதிராக நடந்த மாணவர்கள், தொழிலாளர்கள் போன்ற பிற பிரிவினர்களைப் போல் வழக்கறிஞர்களும் போர்க்குணத்துடன் போராடி தமது உணர்வை வெளிப்படுத்தினார். ஆனால் வழக்கறிஞர்கள் சங்கத் தலைமை சரியில்லாததன் காரணமாக ''பந்த்'' போராட்டம் பிசுபிசுத்து தோல்வியில் முடிந்தது வருத்தத்திற்குரிய விஷயமே.

வழக்கறிஞர்கள் சங்கம் ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பாக இல்லை. ஜனநாயக முறைப்படியான விவாதமோ இயக்கமோ சங்கத்திடம் இல்லை. பல அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், கட்சி சார்பற்ற சில பிழைப்புவாதிகளும் தலைமை பொறுப்புகளை கைப்பற்றி தமது விருப்பத்திற்கேற்ப முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். சங்கத் தலைமையிலுள்ள இவர்கள் ஏதாவது பிரச்சினை வரும்பொழுது தத்தம் நிலையில் இருந்து அணுகி ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளையே மேற்கொள்கிறார்கள். சண்முக சுந்தரம் தாக்கப்பட்டதற்கு எதிரான இப்போராட்டத்திலும் இத்தன்மைகள் வெளிப்பட்டன. தமது தொழில் பாதுகாப்புரிமை, அராஜக ஆட்சிக்கு எதிராக கட்சி சார்பற்ற முறையில் கிளர்ந்தெழுந்த வழக்கறிஞர்களை முறையாக வழிநடத்தி, அவர்களை வளர்த்தெடுக்கும் நிலையில் சங்கத் தலைமை இல்லை.

வழக்கறிஞர்களின் எழுச்சிமிகு போராட்டத்தின் காரணமாக சண்முக சுந்தரம் வழக்கு மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்ட உத்தரவு வந்தது. இதற்குப் பின்னும் போராட்டத்தை தொடர்வதா, முன்பே அறிவிக்கப்பட்ட 27-ந் தேதி ''பந்த்'' போராட்டத்தை நடத்துவதா என்ற கேள்விகளுக்கு வழக்கறிஞர்கள் மத்தியில் பலவிதமாக கருத்துக்கள் நிலவின. சம்பந்தப்பட்ட அமைச்சர் மதுசூதனன் பதவி விலகும் வரை போராட்டத்தை தொடர வேண்டும் என்று இளம் வழக்கறிஞர்கள் பலர் கருதினர். போராட்டத்தை முடித்துக் கொள்ளலாம் என்று மூத்த வழக்கறி

போராடும் வழக்கறிஞர்களை தடுக்கும் போலீசு.





படிப்பகம்

www.padippakam.com

ஞர்களும் மற்றும் பலரும் கருத்து தெரிவித்தனர்.

வழக்கறிஞர்கள் போராட்டத் தொடங்கியபின் எதிர்கட்சிகள் அனைத்தும், ஆதரவு தெரிவித்து, ஜெயா ஆட்சியின் ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்தன. தாக்கப்பட்டவர் தி.மு.க. வழக்கறிஞர் என்பதாலும் இப்போராட்டத்திற்கு தி.மு.க. கூடுதல் அக்கறை எடுத்து உதவி செய்ததன் காரணமாகவும் ம.தி.மு.க., சி.பி.எம். கூட்டணி தொடக்கத்திலிருந்தே ஒருவித ஊசலாட்டத்துடனேயே ஆதரித்தன. இறுதியில் "பந்த்" போராட்டத்தில் கலந்து கொள்வதில்லையென முடிவெடுத்த, ம.தி.மு.க.விற்கு தனது மாநில மாநாடு ஒரு சாக்காக இருந்தது. தி.மு.க.வின் கூட்டணி கட்சிகளும் காங்கிரசும் வழக்கறிஞர்களின் "பந்த்" போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தாலும் அது அடையாளத்தனமாகவே இருந்தது. இதற்கான பிரச்சாரத்தை இவை மக்கள் மத்தியில் செய்து ஆதரவு திரட்டவில்லை.

பிரச்சினையின் தன்மையை பருண்மையாக புரிந்து கொள்ளாததும் போராட்டத்தை எத்திசையில், எந்நோக்கத்திற்காக எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தெளிவு இல்லாததும் சங்கப் பொறுப்பாளர் ஆர். கருப்பன் (ம.தி.மு.க.) அவர்கள் கூறிய வாசகங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். "வழக்கறிஞர்கள் போராட்டம் மக்கள் போராட்டமாகிவிட்டது; "பந்த்" வரை போராடிவிட்டு பிரச்சினையை மக்கள் கையிடம் ஒப்படைத்து விடுவோம்; அதற்கப்புறம் அது அவர்களுடைய பிரச்சினை... தொடர்ந்து அமைச்சர் பதவி விலகும்வரை நாங்கள் போராடிக் கொண்டிருக்க முடியாது; தொடர்ந்து போராடினால் ஜெயலலிதா தரப்பினருக்கு எதிராக நீதிமன்ற சட்டபூர்வ நடவடிக்கைகள் மூலம் நெருக்கடி கொடுக்கும் வாய்ப்பை இழந்தவர்களாகி விடுவோம்."

**அராஜக ஆட்சிக்கு எதிராக கட்சி சார்பற்ற முறையில் கிளர்ந்தெழுந்த வழக்கறிஞர்களை முறையாக வழி நடத்தும் நிலையில் சங்கத் தலைமை இல்லை.**

சில எதிர்க்கட்சிகள் பிரச்சினையில் தலையிட்டு விட்டதையே மக்கள் பிரச்சினையாகிவிட்டதாகப் பார்க்கிற குறுகிய பார்வையையும் சந்தர்ப்பவாதமான வியாக்கியானத்தையுமே வெளிப்படுத்துகிறார். அரசியல் கட்சிகளைப் போலவே வழக்கறிஞர்களும் பிரச்சினையை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று ஆதரவு திரட்டுவது என்பதை செய்யாது தவறிழைத்தனர்.

சாதாரண கூலி விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், மாணவர்கள் என தமிழக மக்களனைவருமே ஜெயா ஆட்சியில் ரவுடிகளின் கத்தி - சைக்கிள் செயின், போலீசின் லத்தி - துப்பாக்கி ஆகியவற்றின் கோரப்பிடிக்குள் சிக்கி அன்றாடம் அவதியுறுகிறார்கள்; தாக்கப்படுகிறார்கள்; கொல்லப்படுகிறார்கள். இதன் ஒரு பகுதிதான் வழக்கறிஞர்கள் மீதான தாக்குதல்களும். வழக்கறிஞர்கள் ரவுடித்தனத்தின் பாதிப்பை நேரடியாக உணர்ந்து போராட வீதிக்கு வந்தபின், இனி இத்தகைய தாதா, ரவுடிகளுக்காக வாதாடி உதவுவதில்லை என்று ஒரு முடிவெடுக்கலாமல்லவா? சங்கத்தில் தீர்மானம் போட்டிருக்கலாம் அல்லவா? இக்கேள்விகளை கேட்டதற்கு பெரும்பாலான வழக்கறிஞர்கள் "அது எப்படி முடியும்? யாருக்கும் வழக்காடுவதுதான் எங்களது தொழில்" என்றே 'தொழில் தர்மம்' பற்றி பேசினார்கள். பரந்துபட்ட மக்களிடம் ஆதரவை பெறுவதற்கும் இத்தகைய 'தொழில் தர்மமே' இவர்களுக்குத் தடையாக இருக்கிறது.

வழக்கறிஞர்கள் பெரும்பாலும் நன்கு பெயரெடுத்து சம்பாரிக்கிறதிலோ, அரசு தரப்பு வழக்கறிஞராவதிலோ, நீதிபதியாவதிலோதான் கனவுகளையும் ஆசைகளையும் சுமந்து செயல்படுகிறார்கள். குஜராத்தில் கேசவானந் என்ற காமக்கொடூரனுக்கு ஆதரவாக யாரும் வழக்காட மாட்டோம் என வழக்கறிஞர்கள் புறக்கணித்தது போன்று தமிழகத்தில் எந்த சம்பவங்களும் குறிப்பிடும்படி இல்லை. இங்கு நடக்கும் போலீசின் கொலை, கற்பழிப்பு மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வழக்கறிஞர்கள் முன் கை எடுத்து எவ்வளவோ செய்ய முடியும். ஆனால் இதுபோன்ற பொதுநடவடிக்கைகள், மக்கள் - சமூக பிரச்சினைகளில் அக்கறை வழக்கறிஞர்களிடையே வெளிப்படாது இருப்பது அவர்களை மக்களிடமிருந்து அன்னியப்படுத்தவே உதவுகிறது.

ஜெயா கும்பலின் மாஃபியா - கிரிமினல் நடவடிக்கைகள் கீழ்மட்டம் வரை அமைப்பாக்கப்பட்ட வடிவில் பரவி வருகிறது. இக் கிரிமினல் அரசியலை நாமும் கீழ்மட்ட அளவிலிருந்து விழிப்புணர்வும் மக்கள் குழு சார்ந்த எதிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமே முறியடிக்க முடியும். எனவே வழக்கறிஞர்கள் மக்களுடன் கரம் கோர்க்க முன் வரவேண்டும். இதில்தான் வழக்கறிஞர்களுக்கு கிரிமினல்களிடமிருந்து முழுமையான பாதுகாப்பு இருக்கிறது.

● ராசு

## வன்முறைக் கும்பலாய்ச் சீரழிந்தது வினோத் மிஸ்ரா குழு

மே 1-ந் தேதியன்று சீர்காழியில் நடந்த இரால் பண்ணை அழிப்புப் போராட்டத்தின் பொழுது, வி.வி.மு. தோழர்களைப் போலீசுக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகக் கும்பலாய்ச் செயல்பட்ட வினோத் மிஸ்ரா கும்பல் பற்றி ஏற்கனவே அம்பலப்படுத்தி எழுதியிருந்தோம். தங்களின் துரோகத்தை தமிழ்நாடெங்கும் சந்தி சிரித்துப் போனதாலும், அக்குழுவைச் சேர்ந்த அணிகளும் மக்களும் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் வக்கற்றுப் போய், அந்த ஆத்திரத்தை வி.வி.மு. தோழர்கள் மீது தாக்குதல் தொடுத்தும் வி.வி.மு. வினர் மீது ஆதாரமற்ற அவதூறுகளை அள்ளி வீசியும் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறது அக்கும்பல்.

கடந்த 25.5.95 அன்று வி.வி.மு.வைச் சேர்ந்த தோழர் கார்த்திகேயனை இத் துரோக கும்பலைச் சேர்ந்த ஏழு பேர் சூழ்ந்து கொண்டு தாக்கியுள்ளனர். இந்த ரௌடித்தனத்திற்கு வி.மி. குழுவின் சி.பி.ஐ. (எம்.எல்.) — மாவட்டச் செயலாளர் T.K.S. ஜனார்த்தனன் தலைமை தாங்கியுள்ளான். "பத்திரிகை இருந்தா எதை வேண்டுமானாலும் எழுதி விடுவதா? என்ன ஆதாரம் இருக்கு? பொதுக்கூட்டத்தில் பிரசுரம் கொடுத்தவனை அடித்ததோடு விட்டது தவறு; கொலை செய்து போட்டிருக்க வேண்டும்" என வேண்டுமென்றே தோழரிடம் வம்பு பேசி தாக்கியிருக்கிறார்கள். உடனிருந்த அக்கட்சியின் வட்டச் செயலாளர் குணசேகரன், தடுப்பது போல் நடித்து ஜனார்த்தனன் நேரடியாகத் தோழரை அடிப்பதற்கு உதவியுள்ளார்.

வி.மு. குழுவினரின் ஆத்திரமூட்டலுக்குப் பலியாகாத அத்தோழர் அங்கிருந்த மக்கள் மத்தியில் பொதுவுடைமை கட்சி என்று கூறிக் கொண்டு மக்களை ஏய்க்கும் சமூக விரோத கும்பல்தான் வி.மி. குழு என்பதை அம்பலப்படுத்தியுள்ளார். "அராஜகத்தாலும் அவதூறுகளாலும் புரட்சியாளர்களை அடக்கிவிடவோ மக்களை வென்றெடுத்துவிடவோ முடியாது" என்பதை மற்றொரு 'மார்க்சிஸ்ட்'டாகச் சீரழிந்து போன வி.மி. கும்பல் புரிந்து கொள்ளட்டும்.

தகவல்: வி.வி.மு., சீர்காழி.

www.padippakam.com

# அந்நியமயமாகும் இந்தியத் தொலைபேசி

**தொலைத் தொடர்பு துறை அந்நியமயமாக்கம் லட்சக்கணக்கான ஊழியர்களை வீதிக்குத் தள்ளும்; மக்களுக்கு தொலைபேசி எட்டாக் கனியாகிவிடும்.**

அரசுத் துறைகள் எல்லா வற்றையும் பன்னாட்டு தொழிற் கழகங்களுக்குத் (MNC) தாரை வார்த்து வரும் பட்டியலில் தற்போது தொலைத் தொடர்புத் துறை சேர்ந்திருக்கிறது. தொலைத் தொடர்புத் துறையில் இரு பிரிவு உண்டு. ஒன்று: தொலைபேசி நிலையங்கள் (Exchanges), கம்பிகள் (Cables), ''ஆண்டனாஸ்'' போன்றவை மூலம் நாடு முழுவதும் வலைப் பின்னலை கட்டியமைத்து இயங்கி வரும் சேவைப் பிரிவு. இதை அடிப்படை சேவை(Basic Service) என்பர். மற்றொன்று: இச் சேவைப் பிரிவுக்கு வேண்டிய சாதனங்களை உற்பத்தி செய்யும் பொதுத் துறை நிறுவனங்கள்.

இதில் உற்பத்தி பிரிவை ஏற்கனவே தனியாருக்கு தாரை வார்த்த இந்திய ஆட்சியாளர்கள், தற்போது சேவைப் பிரிவை தாரை வார்க்கிறார்கள். தனியார் என்றால் உற்பத்தி பிரிவில் பன்னாட்டு கம்பெனியுடன் கூட்டில்லாத இந்திய கம்பெனிகள் உண்டு. சேவைப் பிரிவிலோ பன்னாட்டு கம்பெனியுடன் கூட்டுள்ள இந்திய கம்பெனிகள் மட்டுமே அனுமதிக்கப் படுகின்றன. இதற்கேற்ப 5 லட்சம் தொலைபேசி இணைப்பு கொடுத்து இயங்கிய அனுபவம் வேண்டும் என்ற விதி வைத்திருக்கிறார்கள். குறிப்பிட்ட சில அந்நிய - பன்னாட்டு நிறுவனங்களுக்கே இத்தகைய அனுபவம் உண்டு. மேலும் அந்நிய கம்பெனிகள் இந்திய பொதுதுறை நிறுவனத்துடன் கூட்டு வைத்துக் கொள்ள முடியாதபடி தடை விதித்துள்ளனர்.

அஞ்சல் துறை சேவையை தனியார்களுக்கு அனுமதித்தபின் ''கூரியர் சர்வீஸ்'' என்ற பெயரில் தனி போக்குவரத்து - பட்டுவாடா - தொடர்புகளை வைத்துக் கொண்டதைப் போல் தொலைத் தொடர்புத் துறை சேவைப் பிரிவிலும் தனி வலைப் பின்னலை பன்னாட்டு கம்பெனிகள் நிர்மானிக்கவே அனுமதிக்கப்படுகின்றன.

தொலைபேசி நிலையங்கள், கம்பி இணைப்புகள், விண்கோள் ஒலி பரப்பு நிலையங்கள் முதலியவற்றை நகரங்களில் உள்ளூர் தொலைபேசி இணைப்புக் களுக்காக (Local Call) தனியாக நிர்மானிக்க உள்ளன, பன்னாட்டு நிறுவனங்கள். தொலைதூர தொலை பேசிகளுக்கு (STD - உள்நாடு தொலைபேசி, (ISD - வெளிநாடு தொலைபேசி) உரிய இணைப்புகளை 5 வருடம் கழித்தே தனியே நிர்மானிக்க அனுமதிக்கப்படுவதால் அதுவரை இந்திய அரசு துறையின் வலைப்பின்னலை - கட்டமைப்பைத் தான் பன்னாட்டு கம்பெனிகள் பயன்படுத்திக் கொள்ள உள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த யு.எஸ். வெஸ்ட், ஏ.டி. அண்ட் டி, பிரிட்டிஷ் டெலிகாம், பிரான்சு டெலிகாம், பெல் கனடா, பிரிட்டிஷ் கொலம்பியா, நினெக்ஸ் கார்ப்பரேசன், என்.டி.டி. கார்ப்பரேசன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டெல்ஸ்ட்ரா, மில்லிகாம், சிங்கப்பூர் டெலிகாம், தாய்லாந்தைச் சேர்ந்த டெலிகாம் ஆசியா, டெலிகாம் மலேசியா, பெல் அட்லாண்டிக், ஸ்டெட் முதலிய அந்நிய - பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய அடிப்படை சேவைப் பிரிவில் நுழைய விண்ணப்பித்துள்ளன. இவற்றுடன் டாட்டா, பிர்லா, இந்துஜா, மோடி, அம்பானி, எஸ்ஸார், ஸ்பிக், ஆர்.பி.ஜி. முதலிய தரகு முதலாளித்துவ கும்பல்கள் கூட்டு வைத்துள்ளன.

பன்னாட்டு கம்பெனிகள் ஏலம் எடுப்பதற்கான அறிவிப்பை மத்திய அரசு கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டது. தொலைத் தொடர்புத் துறை ஊழியர்களின் போராட்ட எச்சரிக்கை, கௌகாத்தி உயர்நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத்தடை உத்தரவு காரணமாக ஏல விண்ணப்பங்களுக்கான இறுதி தேதியை தள்ளிவைத்துக் கொண்டே வந்தது. ஜூன் 23-ந் தேதி கடைசி தள்ளி வைப்பாக இருந்ததால் ஜூன் 19-ந் தேதி முதல் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர்.

ஏல விண்ணப்பங்களை பரிசீலிக்க அனுமதி கோரி மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தது. உச்ச நீதிமன்றம், ஏல விண்ணப்பங்களை மத்திய அரசு பரிசீலித்து முடிவு தெரிவிக்க இருந்த உயர் நீதிமன்ற இடைக்காலத் தடையை நீக்கியது. மேலும் உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு வெளியாகும் வரை ஏலம் எடுக்கும் கம்பெனிகளின் செயல்பாட்டுக்குத் தடை விதித்துள்ளது. ஆக இச்சேவைப் பிரிவில் தனியார் நுழைவு என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது; நாட்குறிப்பு வைபோகம் மட்டுமே பாக்கியுள்ளது.

ஒரு நாட்டின் ராணுவம் மற்றும் பிற ரகசியங்களை உளவு பார்ப்பதற்கும் அதன் சுயாதிபத்தியத்தை இழக்கச் செய்வதற்கும் அந்நாட்டின் தகவல் தொடர்புத் துறையை கைப்பற்றினால் போதுமானது. அந்த அளவிற்கு இன்றைய நவீன தகவல் தொடர்பு விஞ்ஞான காலத்தில் முக்கியத்துவம் உடையதாகி விட்டது, தொலைத் தொடர்புத் துறை. இத்துறையைக் கைப்பற்றினால் படிப்படியாக மற்ற துறைகளையும் கைப்பற்றி ஆட்சிக் கவிழ்ப்புகளைக் கூட நிகழ்த்த முடியும். அந்நாட்டினை அடிமையாக்க சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்த முடியும். சிலி மற்றும் துணை சஹாரா ஆப்பிரிக்க நாடுகள் இதற்கு உதாரணங்களாக இருக்கின்றன.

எனவேதான் ஏகாதிபத்திய நாடுகள் தமது தொலைத் தொடர்புத் துறையில் குறிப்பாக சேவைப்பிரிவில் அந்நியர்களுக்கு 20 சதவிகிதத்திற்குள்தான் மூலதனமிட அனுமதித்துள்ளன. மாறாக அதிக அளவு மூலதனமிட்டு ஏழை நாடுகளின் தொலைத் தொடர்



www.padippakam.com

புத் துறையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் துடிக்கின்றன. இந்திய ஆட்சியாளர்கள், அந்நிய மூலதனத்திற்கு 49% வரை அனுமதித்துள்ளனர். எஞ்சிய 51 சதவிகிதத்திலும் இந்திய கூட்டு நிறுவனங்களின் பங்குகளை வாங்கியும் அந்நிய நிறுவனங்களே ஆதிக்கம் செய்யும்.

காட் மற்றும் உலக வர்த்தக கழகம் (WTO) ஆகிய 'பொது' உடன்பாட்டின் கீழ் மேல்நிலை வல்லரசு நாடுகள் ஏழை நாடுகளின் பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைகின்றன. இதற்காக பலகோடி ரூபாய் மூலதனத்தில் தொழிற்சாலைகளை இந்தியா போன்ற ஏழை நாடுகளில் தொடங்கி வருகிறார்கள். தொழிற்சாலைகளுக்குத் தேவையான அடிப்படை கட்டுமானங்களான (Infra' structures) போக்குவரத்து, மின்சாரம், தொலைத் தொடர்பு, வங்கி - இன்சூரன்ஸ் ஆகிய துறைகளிலும் ஏராளமான நிதியை திருப்பிவிட்டிருக்கிறார்கள்.

தொழில் துறை, இதற்கான அடிப்படை கட்டுமானத்துறைகளின் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகள் அனைத்திலும் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதன் மூலம் ஏழைநாடுகளை தமது நேரடி காலனிகளாக்கிக் கொள்வது ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளுக்கு எளிதாகிவிடும். குறிப்பாக நாட்டின் அனைத்து துறைகளுக்கும் தேவையாக உள்ள தொலைத் தொடர்புதுறை சார்ந்த சேவை மற்றும் உற்பத்தி பிரிவில் தான் இன்று மற்றவைகளைக் காட்டிலும் கொள்ளை லாபம் ஈட்ட முடிகிறது. இத்துறையில் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி விட்டால் மற்ற துறைகள் மீதும் ஆதிக்கம் செலுத்தலாம்; அதன் ரகசியங்களை உளவறியலாம். ஒரு நாட்டின் ராணுவத்தை முதலில் கைப்பற்றுவதை விட இத்துறையை கைப்பற்றுவதையே இன்று முக்கியமாக கருதுகின்றன, ஏகாதிபத்தியங்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கை, தாராளமயமாக்கம் மூலம் மற்ற துறைகளைப் போலவே தொலைத் தொடர்புத் துறையின் உற்பத்தியை அந்நிய ஆதிக்கத்திற்கு திறந்துவிட்டது இந்திய ஆளுங்கும்பல். புதிய தொலைத் தொடர்புக் கொள்கையின் மூலம் சேவைப் பிரிவையும் திறந்துவிட்டு தமது கட்டுப்பாட்டை இழந்து வருகிறது. இந்தியா தொலைத் தொடர்புத் துறையில் தனது ஆதிக்கத்தை இழந்து வருவது அது மீண்டும் காலனி நாடாகி வருவதற்கு சிறந்த உதாரணம். ஆளும் காங்கிரசு கும்பல் இதற்கு முன் கை எடுக்கிறது என்றால் இதற்கு எதிர்ப்பு காட்டாதன் மூலம் பிற எதிர்கட்சிகள் உடந்தையாக இருக்கின்றன.

மத்திய அரசு முக்கியத்துவம் வாய்ந்த இத்தொலைத் தொடர்புத் துறையை அந்நியர்களுக்கு தாரைவார்க்க மேற்கொண்ட முறைகளும் கூறும் காரணங்களும் மிகவும் கீழ்த்தரமானவை.

கீழுள்ளவை தொலைத் தொடர்புத் துறையில் உள்ள காரணங்களாக மத்திய அரசு குறிப்பிடுவன:

— எட்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் (97-க்குள்) 1 கோடி பேர் தொலைபேசிக்கு விண்ணப்பிப்பார்கள் என்றும் அதற்காக ஒதுக்க வேண்டிய நிதியில் 23,000 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

— தொலைபேசி பயன்படுத்துவோரின் உலக சராசரி அளவோ 14 சதவிதம். நமது நாட்டு அளவோ 0.87 சதவிகிதம்.

— தொலைத் தொடர்புத் துறையின் சேவைத்திறன் / தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. லஞ்ச ஊழல் பெருகிவிட்டது.

— தொலைத் தொடர்புத் துறை நிர்வாகத்தில் மெத்தனம் நிலவுகிறது. கொள்கை முடிவு, நிர்வாகம், இயக்கம் மூன்றுமே ஒருமித்த கவனம் செலுத்த முடியாது சிக்கலுள்ளது.

— புதிய தொழில் நுட்பங்களின் அடிப்படையில் துறையை நவீனப்படுத் வேண்டியுள்ளது. இதற்கா தொழில் நுட்பமும் நிதியும் அரசிட இல்லை.

இவைகள் எல்லாம் ஏதோ திடீரெ தோன்றிவிட்டதுபோல், தமக்கும் இந் அவல நிலைகளுக்கும் தொடர்பே இ லாதது போல் பேசி வருகிறார்கள், ஆட் யாளர்கள். இப்பிரச்சினைகளுக்கெ லாம் ஒரே தீர்வாக ஆளும் கும்பல் அந் யமயமாக்கத்தையே முன்வைக்கிறது.

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதிப்பிட்டுள்ள 75 லட்சம் தொலைபேசி இணைப்புத் தேவைக்குப் பதிலாக 1 கோடி தொலைபேசி இணைப்புகள் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாக வும், 7000 முதல் 8000 கோடி ரூ. நிதிப் பற்றாக்குறைக்குப் பதிலாக 23000 கோடி ரூபாய் பற்றாக்குறை இருப்பதாகவும் போலியான புள்ளி விவரங்களை முன்வைத்து அந்நியருக்கு விடுவதை நியாயப்படுத்துகிறார்கள், ஆட்சியாளர்கள்.

இதனடிப்படையிலேயே கடந்த ஆண்டு மே மாதம் தேசிய தொலைத் தொடர்புக் கொள்கையைக் கொண்டு வந்தது, காங்கிரசு கும்பல். காத்திருப்போரின் தொலைபேசி இணைப்புகளை பூர்த்தி செய்வது, உலக தரத்திற்கு இந்திய தொலைத் தொடர்புத் துறையை உயர்த்துவது, மக்களுக்கு நியாயமான கட்டணத்தில் வழங்குவது ஆகிய மூன்று அம்சங்களை வலியுறுத்தி இதற்கான வழிமுறையாக, தீர்வாக தனியாருக்கு விடுவதற்கான குறிப்புகளை விதிகளாகக் கொண்டதுதான், தேசியத் தொலைத் தொடர்புக் கொள்கை.

இப்புதிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தொலைத் தொடர்பின் அடிப்படை சேவையிலும், மதிப்பு கூடிய சேவையிலும் (Value added service) — அதாவது கம்பியில்லா தொலைபேசி (Cellular), பேஜிங் (Paging), எலக்ட்ரானிக் மெயில் (E-Mail), வி.சாட் (VSAT) போன்றவைகளின் சேவையிலும் — தனியார் நுழைவதற்கான வழிகாட்டுதல்களை (Guidelines) கடந்த ஆண்டு செப்டம்பரில் அறிவித்தது, மத்திய அரசு. இதில் உள்ள விதிகள் முழுவதும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சாதகமானவையும், தொலைத் தொடர்பு ஊழியர்கள் மற்றும் மக்களுக்கு விரோதமானவையுமாகும். பிரதமர் ராவ் அமெரிக்காவிற்கும் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் சுக்ராம் ஜப்பானுக்கும் சென்று நடத்திய ரகசிய பேரங்களுக்குப்பின் தான் இவை அறிவிக்கப்பட்டன. எவ்வளவு ஊழல் நடந்தது போன்ற விவரங்கள்



இந்தியாவில் ஆஸ்திரேலிய தொலைத் தொடர்புக் கம்பெனியின் விளம்பரப் பலகை

வெளியாகவில்லை.

அரசு, தானே அறிவித்த திகளை மீறியதாகவும் வில தொழிற்சங்கங்கள் பிரச் பி வழக்குத் தொடுத்தன. ன்னாட்டு கம்பெனிகள் சாதக காண்டன. தொழிற்சங்கங்க சாட்டிற்கு விளக்கம் கொடுக் ட்டு மத்திய அரசுக்கு நிர்ப்பந் த்து மேலும் சில சலுகைக றன.

டிப்படை சேவையில் மூலதன ரியார் கம்பெனிகள் 10% அள கிராமங்களில் தொலைபேசி செய்து கொடுக்க வேண்டும் வழிகாட்டுதலில்'' விதித்திருந்த னயை விலக்கிக் கொண்டு விட் திய அரசு.

பன்னாட்டு கம்பெனிகள் அரசு நிலையங்களையும், வலைப் பின் ளயும் பயன்படுத்த அரசுடன் ஒப் போட்டுள்ளன. இப்படி பயன்ப தற்குரிய தொகை, வாடகைகளில் charges) ஏற்கனவே நிர்ணயித்தி தவிட குறைத்து ஒப்பந்தம் போட் து மத்திய அரசு. எஸ்.டி.டி.யில் யூனிட்டுக்கு நம்மிடம் வாங்கும் ரூ பைசாவில் 64 பைசாவை தனியார் அரசுக்கு செலுத்த வேண்டும் என்று யித்து பின் 50 பைசாவாக்கியுள் இதைபோல் ஐ.எஸ்.டி.யில் ஒரு ட்டுக்கு ரூ. 1.40 பைசா பொது மக்க ம் வசூலிப்பதில் அரசுக்கு செலுத்த ண்டிய 87 பைசாவை 70 பைசாவாக் புள்ளது. இதன் மூலம் ஒப்பந்தம் போட் ள 15 வருட காலம் வரை கணக்கிட் ல் 38000 கோடி ரூபாய் அரசுக்கு நட் ம்.

இந்த இரண்டு முக்கியமான மாற் ங்களோடு வங்கி செயல்பாட்டு உத பிக்கு உத்தரவாதம், மின்னனு புள்ளியல் முறையிலான தொழில்நுட்பங்களை எங் தும் பயன்படுத்திக் கொள்ள அனுமதி போன்ற பல சலுகைகளையும் புதிதாக வாரி வழங்கியது காங்கிரசு கும்பல். இப் படி வலிந்து போய் எஜமானர்களுக்கு சேவை செய்து பாதம் நக்கும் கலை காங் கிரசு கும்பலுக்கே உரிய தனித்திறமை தான்!

அதிகார வர்க்கத்தின் ஊழல் மற்றும் சிவப்பு நாடா நிர்வாக முறையால் நலிவுற்ற அரசு - பொதுத்துறை ஆலைகளை தனியாருக்கு தாரைவார்த்தது போய் லாபமீட்டுகிற - வளர்ச்சியிலிருக்கிற ஆலைகளையும் ஏகாதிபத்தியங்களின் கட்டளைக்கேற்ப தனியாருக்குவிடத் தொடங்கிவிட்டார் கள், ஆட்சியாளர்கள். இதற்காக ஏராள மான சதிகள், பொய்கள் மூலமும் திட்ட மிட்டே லாபத்தில் இயங்குகிற பொது



தொலைத் தொடர்புத் துறைப்பரம் பேசி விற்ற அமைச்சர் சுக்ராம்

துறை ஆலைகளையும் அரசவை துறைகளையும் நட்டத்திற்கு தபதன் மூலமும் தனியார் கொள்ளைதவு திறந்துவிட துணிந்து விட்டார்.

தொலைத் தொடர்புத் [illegible]யில் அடிப்படை சேவையை தனக்கு விடுவதற்காக ஆளும் கும்பல் [illegible]வைக் கும் காரணங்கள் முழுப்பொய்

எட்டாவது ஐந்தாண்டு திஇலக் கான 75 லட்சம் தொலைபேசி இணப்பு களை அரசே பூர்த்தி செய்ய [illegible]யும். ஏனெனில் கடந்த ஆண்டு இரு 14 லட்சம் புதிய தொலைபேசி இணப்பு களை பூர்த்தி செய்வதாக இருந்து 17.76 லட்சம் இணைப்புகள் பூர்த்திசெய்யப்பட்

> **தொலைத் தொடர்புத் துறையில்தான் கொள்ளை லாபம் ஈட்ட முடிகிறது. இத்துறையில் ஆதிக்கம் செய்தால் அனைத்து துறைகளிலும் நுழையலாம்; உளவறிந்து ரகசியங்களை அறியலாம் என்பதாலேயே பன்னாட்டு கம்பெனிகள் படையெடுக்கின்றன.**

டுள்ளன. இது இருக்கு வ[illegible]திகளை கொண்டே கடுமையாட[illegible]த்த ஊ யர்களினாலேயே ஈத்[illegible]யமானு எனவே சேவைத்தரம் திற[illegible] வீழ்ச்சி டைவதாக கூறுவது [illegible]விடு[illegible]பொடியபி விடுகிறது. நிர்வாக மேளா[illegible]ம். லஞ் ஊழலும்தான் உடன மு[illegible]றும் முற யான சேவையின்மைக்கு[illegible] காரணங்க ளாக இருக்கின்றன. [illegible]முழுக்கதி கார வர்க்கம் தோற்றுவித்[illegible]வையே.

அதேபோல் எட்டா[illegible]து ஐந்தாடு திட்ட இலக்கில் [illegible]ள்ள [illegible]1000 கோடி ரூபாய் பற்றாக்குறையை[illegible] பொதுமக்களி டம் பங்குகள் வெளியிட்டு வசூலித்தோ, உள்நாட்டு நிதி மற்றும் காப்பீட்டுநிறுவ னங்களிடம் நியாய வட்டிக்கு கடன் பெற்றோ ஈடு செய்ய லாம். உரியாக தேவைப்படும் இணைப்புகளுக்குலாக் காவின் வருவாயைக் கொண்டும். தரகு முதலாளிகளும் அரசியல்வாதிகளும் பெருவணிகர்களும் பாக்கி வைத்துள்ள ரூ. 1824 கோடியை வசூலித்தும் ஈடு செய்யலாம். ஏற்கனவே பம்பாய், டில்லி நகர இலாக்காவை பொதுத்துறை நிறுவ னமாகத் (MTNL என்றழைப்பர்) தான் நடத்தி வருகிறார்கள்.

அதேபோல் தொழில்நுட்ப குறை பாடு என்பதும் முழுபொய். ஏற்கனவே பல பன்னாட்டு கம்பெனிகளுடன் தொழில்நுட்ப உதவிக்காக சமனற்ற ஒப் பந்தம் போட்டு பல நவீன வசதிகளையும் இந்திய அரசு பெற்றிருக்கிறது. கூடுத லாக தேவைப்படும் தொழில்நுட்பதகவி களை சமமான ஒப்பந்தத்தின் மூலம் அந் நிய நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள் ளலாம்.

குறிப்பாக வெளிநாடுகளுக்குரிய தொலைபேசி இணைப்புகளுக்காக அந் நிய தொழில்நுட்ப உதவியுடன் விதேஸ் சான்சார் நிகாம் லிமிடெட் (VSNL) என்ற பொதுத்துறை நிறுவனம் இங்கு இயங்கி வருகிறது. இது நவீனத் தேவையான செல்லுலார், பேஜிங், எலக்ட்ரானிக் மெயில், எலக்ட்ரானிக் டேட்டா இன்டர் சேஞ் (EDI), விசாட் அனைத்தையும் இயக் கத் தகுதி பெற்றது. இந்த மதிப்பு கூடிய சேவையில் நுழையும் பன்னாட்டு கம்பெ னிகள் இப்பொதுத்துறை நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்ளவே ஒப்பந்தம் போட்டுள்ளன.

மேலும் இந்தியாவிற்கும் பொருத்த மான 'சி-டாட்' என்ற தொழில் நுட்ப முறை இங்குள்ளது. மற்றவைகளைக் காட்டிலும் இது குறைந்த முதலீடும் கிரா மங்களுக்கு பயன்படுத்த ஏற்றதுமான முறை. இதை இந்திய அரசு பரவலாக்குவ தற்கு பதிலாக இதையும் பன்னாட்டு நிறு வனங்கள் பயன்படுத்தி ஆதாயமடை யவே வழி செய்திருக்கிறது.

தேசிய தொலைத்தொடர்புக் கொள் கையில் இருந்த ஒரு ஓட்டையைப் பயன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தொழிற்சங்கத் துரோகம் தலைவர்களுக்கு செருப்படி

தொலைத் தொடர்புத் துறையின் அடிப்படை சேவையை தனியாருக்கு விடுவதற்கு எதிராக இந்தியா முழுவதுமுள்ள ஊழியர்கள் கடந்த ஜூன் 19 முதல் 5 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தொலைத் தொடர்புத் துறையிலுள்ள என்.எப்.டி.இ. (NFTE), எஃப்.என்.டி.ஓ. (FNTO), பி.டி.இ.எஃப் (BTEF), ஆகிய மூன்று தொழிற் சங்க கூட்டமைப்புகள் இப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டன. இச்சங்கத் தலைமைகள், உற்சாகமாக - உணர்வு பூர்வமாக போராட்டத்தில் பங்கெடுத்தத் தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கும் நிலையிலேயே உள்ளன. என்.எப்.டி.இ-ன் மாநிலச் செயலாளர் ஆர். கிருஷ்ண மூர்த்தியையும் தலைமையிலுள்ள வேறு சிலரையும் சந்தித்து பேட்டிக் கண்டோம். இவர்கள் கூறிய கருத்துக்களில் குறிப்பிடும்படியானவை இவை:

தேசிய தொலைத் தொடர்புக் கொள்கையில் பெரிய அளவிற்கு பிரச்சினை இல்லை என்றும் அதனால் அது கொண்டு வந்தபோது நாங்கள் எதிர்க்கவில்லை என்றும் இதில் கூறப்பட்ட விதிமுறைகளும் கடைபிடிக்கப்படாமல் மீறலும் விலகலும் (Violation and deviations) நடந்துள்ளன என்றும் கருத்து தெரிவித்தனர். மதிப்பு கூடிய சேவைகளை தனியாருக்கு விடுவதை எதிர்க்கவில்லை; அடிப்படை சேவையில் தனியாரை அனுமதிப்பதைத்தான் எதிர்க்கிறோம் என்று கூறினர். ஆனால் அடிப்படை சேவையும் தனியாருக்குச் செல்வதை தடுக்க முடியாது என்ற கருத்தையும், அதை இதுபோல் விலகலும் மீறலும் இருப்பதாகக் கூறி சட்டரீதியாகவாவது தடுக்க முடியுமா என்றுதான் பார்க்கிறோம் என்பதையும் மறைமுகமாக வெளிப்படுத்தினர்.

புதிய தொலைத் தொடர்புக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட TRAI என்ற கண்காணிப்பு - கட்டுப்பாட்டு கமிட்டியை அமைக்காமலேயே தாங்களாகவே ரகசிய பேரங்கள் நடத்தி மத்திய ஆட்சியாளர்கள் தனியாருக்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள் என்றுதான் முக்கியமாக குற்றஞ்சாட்டுகிறார்கள். இக்கமிட்டியில் பிரதிநிதித்துவம் கோருவதும், கமிட்டிக்கு கூடுதல் சட்ட அதிகாரம் கோருவதும், இக்கமிட்டி பரிந்துரைப்பவற்றையே மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்பதும்தான் செய்கிறார்களே ஒழிய அக்கொள்கையே தனியாருக்கு விடுவதற்கான அடிப்படையைக் கொண்டுள்ளதாகக் கருதவில்லை. அதாவது முதலாளித்துவவாதிகள் போல பன்னாட்டு சீர்திருத்தத்தையே கோருகிறார்கள். உண்மையில் (TRAI) தொலைத் தொடர்புத் துறையில் அரசின் கட்டுப்பாட்டை படிப்படியாக பன்னாட்டு கம்பெனிகளுக்கு மாற்றி தருவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். நடுநிலையானது என்பத சுத்தபொய். WTO விதிமுறைகள்படியே இது இயக்கப்படும்.

இத்தனியார்மயமாக்க நடவடிக்கை புதிய பொருளாதாரக் கொள்கை, தாராளமயமாக்கம், காட் - உலக வர்த்தக கழகம் போன்றவற்றின் தொடர் விளைவு என்றும் அவைகளுக்கு எதிராக என்ன போராட்டம் நடத்தினீர்கள் என்றும் கேட்டோம். காட் - புதிய பொருளாதார கொள்கை என்பது பொதுப் பிரச்சினை; அதற்கு எங்கள் தொழிற் சங்கங்கள் மட்டுமே எப்படி போராட முடியும் என்று அயோக்கியத்தனமாகத் திருப்பிக் கேட்டனர். எல்லோரும் போராட வர வேண்டும் என்றும் அவ்வாறு வராதது தான் தங்களது போராட்டத்தை தொடர முடியாததற்கு (அதாவது இவர்களது துரோகத்திற்கு) காரணம் என்றும் சித்தரித்தனர். இந்த அடிப்படையிலும் இலாக்கா தனியாருக்குச் செல்வதைத் தடுக்க முடியாது என்று ஆழமாகக் கருதுகின்றனர்.

தொலைத் தொடர்புத் துறையில் லஞ்ச - ஊழல் மலிந்திருப்பதால் பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கும் வெறுப்பு - அதிருப்தி காரணமாக உங்கள் போராட்டத்தை அவர்கள் அந்நியப்படுத்தியே பார்க்கிறார்கள். லஞ்ச ஊழலுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? என்று கேட்டோம். லஞ்ச - ஊழலை துறையில் தோற்றுவிக்கும் அதிகாரவர்க்கத்துக்கு எதிராகப் போராடுகிற, லஞ்ச - ஊழலுக்கு எதிராக ஊழியர்களிடம் கட்டுப்பாட்டை வளர்க்கின்ற எண்ணமே சங்கத் தலைமையிடம் இல்லை என்பதையே உணர முடிந்தது. மேலும் இந்த அரசும் அரசியல்வாதிகளும் துறையை பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரை வார்த்து ஊழல் புரிவதை நியாயப்படுத்துவதற்காக துறையில் கீழ்மட்டம் வரை லஞ்ச-ஊழல் பெருத்து விட்டதாக குற்றஞ்சாட்டுகிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த நேரத்தில் ''ஆமாம் சாமி'' போட்டு ஊழியர்களை நிந்தித்து அரசுக்குத் துணை போகிறார்கள். மற்ற நேரங்களில் எல்லாம் வாயடைத்துக் கொண்டு கீழ்மட்டம் வரை ஊழல் பரவுவதற்கு உடந்தையாகவும் அதிகாரவர்க்கமும் ஆட்சியாளர்களும் திட்டமிட்டு லஞ்ச - ஊழலை அனுமதித்து செய்யும் சதிகளுக்கு ஆதரவாகவும் இருக்கிறார்கள்.

புதிய தொலைத் தொடர்புக் →

படுத்தி அமெரிக்க யு.எஸ்.வெஸ்ட் நிறுவனம் தமிழ்நாடு, கர்நாடகாவில் பல நகரங்களில் மாதிரி திட்டம் (Pilot Project) என்ற பெயரில் தனியே தொலைபேசி நிலையங்களை வைத்துக் கொள்ள அனுமதித்து பின் தொழிற்சங்க எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது, மத்திய அரசு. இந்த குறுக்குவழி முயற்சி இந்திய அரசின் கேடுகெட்ட நடவடிக்கைக்கு சிறந்த உதாரணமாக இருக்கிறது.

அடிப்படை சேவை மட்டுமல்ல தொலைத் தொடர்புக்குத் தேவையான உபகரணங்கள் உற்பத்தி செய்யும் அரசு தொழிற்சாலைகளும் லாபத்திலும் வளர்ச்சியிலும் இருந்தவை / இருப்பவை. பெங்களூரிலுள்ள அரசு நிறுவனமான இந்திய தொலைத் தொடர்பு தொழிற்சாலை (ITI), பஞ்சாப் மாநில அரசின் நிறுவனமான ''பன்வொயர்'' (Punwire), மத்திய பிரதேச அரசின் ஆலையான ''ஆப்டெல்'' (OPTEL), மத்திய அரசின் ''சி-டாட்'' (CDOT), மற்றும் மத்திய அரசின் டி.சி.ஐ.எல். (TCIL) ஆகியவை திறனுள்ள, வளர்ச்சியுள்ள பொதுத்துறை நிறுவனங்களாகும். இவற்றில் டி.சி.ஐ.எல். மட்டுமே தொலைபேசி மாற்றி நிலையங்களை நிர்மானிக்கிற கட்டுமானப் பணி செய்கிறது. மற்றவை அனைத்தும் ஸ்விட்சஸ், ஹெச்.எப் மற்றும் வி.ஹெச்.எப் டிரான்ஸ்ரிசீவர்கள், சி.பி. ரேடியோஸ், தொலைபேசிகள், ஆப்டிக்கல் பைஃபர் கேபிள்கள் முதலானவைகளைத் தயாரிக்கின்றன. இவை தொடக்கத்தில் அந்நிய தொழில்நுட்ப உதவிக்ளைப் பெற்று நாளடைவில் சுயமாக இயங்குகிற அளவிற்கு வளர்ந்துள்ளன வளர்கின்றன.

ஆனால் இந்த உபகரணங்கள் உற்பத்தியிலும் கட்டுமானப்பணியிலும் தனியார் நுழைய 1992-லேயே இந்திய ஆட்சியாளர்கள் அனுமதித்துவிட்டார்கள். திடீரென பன்னாட்டு கம்பெனிகளுடன் போட்டியிடும்படி பொதுத்துறை நிறுவனங்கள் தள்ளப்பட்டதும், பன்னாட்டு கம்பெனிகளின் உற்பத்தி பொருட்களின் மதிப்பு பொதுத்துறை பொருட்களின் மதிப்பைவிட குறைவாகியதும், இறுதியில் விலைகுறைவு என காரணம் காட்டி அரசு துறை ''ஆர்டர்''களையும் பன்னாட்டு கம்பெனிகளுக்குத் தந்ததும்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கை என்ற ஒன்றை அந்நியமய மாக்குவதற்காகவே உருவாக்கியிருப் பது ஆளும் கும்பலின் கேடு கெட்ட அரசியல் கொள்கையின் விளைவு. இதை அரசியல் பிரச்சாரம் - போராட் டங்கள் மூலம் முறியடிக்க முனையா மல் வெறும் சட்ட ரீதியாகவே எதிர்த்து முறியடித்து விட முயற்சித்து ஊழியர்க ளிடம் சட்டவாத கண்ணோட்டத் தையே சங்கத் தலைமைகள் உருவாக் குகின்றன. பிரச்சினையின் தன் மையை சங்கத்தின் அணிகள் உணர்ந்து விடாதபடி திசை திருப்புவ தையும் இருட்டடிப்பு செய்வதையும் தலைமையினர் திட்டமிட்டே செய்கின் றனர்.

வேலை போய்விடும் என்று கூறி வேலை போகிற இக்கட்டான - ஆபத் தான நிலையில் மட்டுமே ஊழியர்க ளைத் திரட்டிப் போராடுவது; இக்குறு கிய பொருளாதாரவாதப் பார்வையை ஊழியர்களிடம் வளர்ப்பது; சங்கப் பத விகளை மட்டும் கெட்டியாகப் பிடித் துக் கொண்டு பிழைப்பு நடத்துவது, நிர்வாகம் - அரசுடன் பேரம் நடத்து வது இவையே தொழிற்சங்கத் தலை மைகளின் நடவடிக்கைகள் என்பதை மேலுள்ளவற்றிலிருந்து புரிந்து கொள் ளலாம்.

தனியார் ஏல விண்ணப்பத்தை பரிசீலிக்க மத்திய அரசுக்கு இருந்த தடையை நீக்கி உச்ச நீதிமன்றம் தீர்ப ளித்த அன்றுதான் வேலை நிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெற்றன, தொழிற்சங்கத் தலைமைகள். உச்ச நீதி மன்றம் பன்னாட்டு கம்பெனிகள் செயல்படுவதற்கு அதுவும் கௌ காத்தி நீதிமன்ற வழக்கு தீர்ப்பு வரும் வரை தடை விதித்தது. இதைக்காட்டி போராட்டம் வெற்றி என தலைமையி னர் கூச்சலிட்டனர். இது துரோகம் எனக்கூறி சங்கத் தலைமைக்கு எதிராக திருச்சி, சென்னை பகுதி ஊழியர்கள் போராடியுள்ளனர். சங்கத் தலைவர் களை திருச்சியில் பெண் ஊழியர்கள் முற்றுகையிட்டு கேள்வி கேட்டு அவ மானப்படுத்தியுள்ளனர். சென்னை யில் NFTE-யைச் சேர்ந்த ஜகன் என்ப வரை ஊழியர்கள் முற்றுகையிட்டு கேள்வி கேட்டனர்.

மேற்கு வங்கத்தில் சங்கத் தலை மைகள் போராட்டம் திரும்பப் பெற்ற செய்தியை அறிவிக்க ஊழியர்களை கல்கத்தா டெலிபோன் பவன் முன்பு கூட்டினர். கோரிக்கை நிறைவேறாம லேயே போராட்டத்தை நிறுத்த ஒத்துக் கொண்டு கையெழுத்திட்டது துரோ கம் எனக் கூறி குழுமிய ஆயிரக்கணக் கான ஊழியர்கள் கேள்வியெழுப்பி மடக்கவே பதில் தெரியாமல் மழுப்பி னர். ஆத்திரமான ஊழியர்கள் தலை மையினரிடமிருந்த அத்துரோக ஒப் பந்த நகலை பறித்து மேடையிலேயே கொளுத்தினர். இதைக் கண்டித்தும், ஊழியர்களை ...கப்படுத்தியும் பேசிய தலைவ...கு எதிராக முழக்கம் எழுப்ப...யர்கள் ...ந்தவே அறைக்கு...டி ஒளிந்துக் கொண்டார்கள். அறையை முற் றுகையிட்டு ...லைவர்களான தவிப்தாஸ், சுப்ரிஇந்த்ரா, அசோக் நந்தி, ராத்நாத் ...ரி ஆகியோரை ஆடைகளை கி... செருப்பால் அடித்து தாக்கி ...டும் மேடையி லேற்றி அவமா...படுத்தியதோடு துரோகமிழைத்த ...ாளை "ஆப்பு நாளாக"வும் அறி...ார்கள்.

போராட்ட...த் திரும்பப் பெற கையெழுத்திட்டு...ன்படிக்கை செய் தவர் - தலைமை...ருப்பவர் சி.பி.ஐ கட்சியைச் சேர்ந்...ப்தா என்பவராக லால் மார்க்சிஸ்...ட்சியைச் சேர்ந் போஸ் அணியி...மே. வங்க ஊழி யர்களிடமுள்ள ...ருப்தியை மூல னமாக்கிக் கொ... முயன்றனர். தமக்கு கையெழு...ட்டதில் உடன்பா டில்லை என்று ...ாஸ் அணியினர் நடித்தது கல்...ாவில் எடுப... வில்லை; ஆனா...ற்ற மாநிலங்களில் இப்படி நடித்து ...து வருகிறார்கள்.

சங்கத் தலைமைக்கு எதிரான விழிப்புணர்வு, ...உணர்வு ஊழியர் கள் மத்தியில் ...ப்படி வராதவரை அவர்கள் கடுக...டுக்குத்தான் வழி காட்டுவர்.

ஆட்சியாளர்கள் அரங்கேற்றிய சதிகள். இதன் காரணமாக ஐ.டி.ஐ. தொழிற் சாலை நட்டத்தை சந்தித்துவிட்டது; மற்ற வையும் நட்டமாவதை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இத்தகைய தனியார்மயமாக்கத்தின் காரணமாக தொலைத் தொடர்புச் சேவைத் துறையில் உள்ள 4.75 லட்சம் ஊழியர்களும், காண்டிராக்ட் தொழிலா ளர்களும் ஐ.டி.ஐ. ஆலையிலுள்ள 28000 தொழிலாளர்களும் பிற பொதுத் துறைகளிலுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் வெளியேற்றப்படு கிற அல்லது உரிமைகள் பறிக்கப்பட்டு கொடுமையாக சுரண்டப்படுகிற நிலைக் குத் தள்ளப்படுகிறார்கள்.

தொழிலாளர் களுக்கு மட்டு மல்ல மக்களுக்கும் பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக "தனியாரது தொலைபேசி கட்டணம் அரசு துறையின் கட்டணத்தைக் காட்டி லும் கூடுதலாக இருக்கக் கூடாது" (அதா வது குறைவாக இருக்கலாம்) என்ற விதியை உருவாக்கியுள்ளோம் என்பது ஆட்சியாளர்களின் அவர்தம் பிரச்சாரர்க ளின் வாதம். இதைவிடக் கேவலமாக "அரசு துறையின் சேவைத் தரம் உயர வேண்டும்; விலை குறைய வேண்டும் என்பதற்காகவே தனியாரை அனும தித்து போட்டியை உருவாக்குகிறோம்" என்றும்கூட வாதிடுகிறார்கள்.

பன்னாட்டு கம்பெனிகள் அரசினு டைய கட்டணத்தைக் காட்டிலும் குறைத் துக் கொள்ளலாம் என்பது அரசு துறையை விழுங்குவதற்கு அல்லது முட மாக்குவதற்கு திறக்கப்பட்ட அபாயகர மான வழியே. கோக்கோ கோலா, பெப்சி போன்ற பன்னாட்டு கம்பெனிகள் இந்தியாவில் சந்தையை பிடிக்கும் நோக் கில் குறிப்பிட்ட நாட்களுக்கு விளம்பரத் தாளை வெட்டி கொடுப்பவருக்கு குளிர் பானத்தை இலவசமாக வழங்கின. சந் தையை கைப்பற்றி காலூன்றும் வரை மற்ற உள்நாட்டு குளிர்பானங்களைக் காட்டிலும் விலை குறைத்தும் விற்கின் றன. இதனால் அக்கம்பெனிகளுக்கு நட் டமில்லை; நட்டம் ஏற்பட்டாலும் அவற் றின் பலநாடுகள் - பல உற்பத்திகளிலி ருந்து வரும் லாபத்தை ஒப்புநோக்குகை யில் அது மிகச் சாதாரணமானதே.

இதே வியாபார தந்திரத்தை தொலைத் தொடர்புத் துறையிலும் கடை பிடித்து அரசுத் துறையை விழுங்குவதற் கும் முடமாக்குவதற்குமே பன்னாட்டு கம்பெனிகள் முழுவும். ஒரு மாநிலத் திற்கு ஒரு தனியார் கம்பெனி மட்டுமே அனுமதிக்கப்படுதால் அக்கம்பெனி அரசு துறையுடன்மட்டுமே போட்டியிடு கிற வாய்ப்பு வேறு உள்ளது.

தொலைத் தொடர்புத் துறையில் பன்னாட்டு கம்பனிகளுக்கு மேலும் ஒரு வசதி இருக்கிறது. "ஆப்டிகல் ஃபைபர் கேபிள்"கள் மூலம் தொலைபேசி இணைப்பும் கேபிள் டி.வி இணைப்பும் சந்தாதாரர்களுக்கு ஒரே சமயத்தில் கொடுக்கும் வசதியிருக்கிறது. பன் னாட்டு கம்பெனிகள் உள்ளூர் தொலை பேசியை கட்டணம் இல்லாமலே கொடுத்து அந்த இழப்பை கேபிள் டி.வி. இணைப்புகள் மூலம் லாபமீட்டி ஈடு செய் யலாம். சந்தையை பிடிக்கும் குறிப்பிட்ட காலம்வரை இப்படி இலவசமாக வழங்கி விட்டு பின்னர் 2, 3 மடங்கு கட்டணத் தைக் கூட்டுவார்கள்.

இது ஒருபுறமிருக்க கட்டணத்தை தனியார் கம்பெனிகள் கூட்டுவதற்கான அடிப்படைதான் அதிகம் உள்ளன.

தொடர்ச்சி 13-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# அரசியலில் சோனியா அருகதை என்ன?

**காங். கட்சிக்குள் ஒரு நெருக்கடி என்றால் முக்கியத் தலைவர்கள் சோனியா வாசலில் போய் நிற்கிறார்கள்.**

நான்காண்டுகளாய் விடை கூறப்படாமல் திரும்பத் திரும்ப எழுப்பப்படும் கேள்வி, ''சோனியா காந்தி அரசியலில் குதிப்பாரா?'' கூடவே ஒட்டிக் கொண்டு வரும் துணைக்கேள்விகள் ''பிரியங்கா அரசியலில் குதிப்பாரா?'', ''ராகுல் அரசியலில் குதிப்பாரா?'' அதுவும் சோனியா காந்தி குடும்பத்தில் சமீபகால நடவடிக்கைகளும் காங்கிரசுக் கட்சியில் அர்ஜுன் சிங் - திவாரி பிரிவினர் ஏற்படுத்திய பிளவும், ராவ் தலைமையை நம்பி அடுத்த பொதுத் தேர்தலைச் சந்திப்பது பெரும் தோல்வியில் முடியும் என்கிற காங்கிரசுக்காரர்களின் பீதியும் இந்த வதந்தியை மீண்டும் பெரிதாக்கியிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் 'உள்ள' சதி அம்சத்தை விசாரித்து வரும் ஜெயின் கமிஷனுக்கு திடீரென்று பிரியங்கா வரத் தொடங்குகிறார். விசாரணையை உன்னிப்பாகக் கவனித்து அவ்வப்போது குறிப்புகள் எடுத்துக் கொள்கிறார். ''முக்கியப் பிரமுகர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்; கட்டுப்பாட்டுடன் விசாரணைகளை நடத்துங்கள்'' என்று பிரியங்காவைக் குறித்து, வக்கீல்களிடமும், சாட்சியங்களிடமும் எச்சரிக்கை விடுகிறார், நீதிபதி ஜெயின். கிரிமினல் சட்ட நுணுக்கமறிந்த வக்கீலின் வேலையைத் தானே அக்கறையுடன் செய்வதாக நடித்துப் ''பந்தாக் காட்டவே'' இவ்வளவு நாளும் இல்லாது திடீரென்று வந்து போகிறார், பிரியங்கா; இதை அறிந்தும், அவர் வந்து போவதையெல்லாம் முக்கியமான பரபரப்பான செய்தியாக்குகின்றன பத்திரிகைகள்.

அமெரிக்காவில் அமிதாப்பச்சன் - அஜிதாப்பச்சன் வாரிசுகளுடன் சொகுசு வாழ்வும் படிப்புமாக வாழும் ராகுல் காந்தி, திடீரென்று உத்திரப் பிரதேசம் - அமேதி தொகுதிக்கு (ராஜீவ் பிரதிநிதித்துவப் படுத்திய தொகுதி) வந்து காங்கிரசுத் தொண்டர்களைச் சந்தித்துப் பேசப் போவதாக அறிவிக்கப்படுகிறது.

அர்ஜுன் - திவாரி முதல் நம்மூர் வாழப்பாடி வரை காங்கிரசின் ஒரு பிரிவினர் இது ராகுலின் அரசியல் பிரவேசத்துக்கான துவக்கம் என்கிற முறையில் வரவேற்கின்றனர். இதனால் பிரதமர் நரசிம்மராவின் கும்பலுக்கு கலக்கம் ஏற்பட்டாலும் மவுனம் சாதிக்கின்றனர். இருந்தாலும் ராகுலின் அரசியல் வரவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் நோக்கோடு, ''முன்பு ராகுலைக் குறை கூறிய வாழப்பாடி இப்போது அவரது அரசியல் பிரவேசத்தை வரவேற்க என்ன தகுதி இருக்கிறது'' என்று கேட்கிறார், ராவின் தமிழ்நாட்டு விசுவாசி குமரி அனந்தன்.

அர்ஜுன் சிங்கும், திவாரியும் நரசிம்ம ராவுக்கு எதிரான பிரச்சாரத்தைத் துவங்கியபோது, அதற்கு சோனியா காந்தியின் மறைமுக ஆதரவும் ஆசியும் உண்டென்கிற வதந்தி பரவியது. அவர்களும் பிளவுக்கு முன்னும் பின்னும் பலமுறை ''காங்கிரசின் ராஜமாதா'' எனப்படும் சோனியாவை போய் தரிசித்துவிட்டு வருகிறார்கள். இது நிச்சயம் ''மரியாதை'' நிமித்தமாகப் போய் குசலம் விசாரிக்கும் வகையைச் சேர்ந்ததல்ல. குறைந்தது, பிரதமர் ராவுக்கு சில நிர்பந்தங்கள் கொடுத்து, தனது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் நோக்கமாவது கொண்டது. ''சோனியாவை ஏன் இழுக்கிறீர்கள். அவர் அரசியலில் இருந்து ஒதுங்கி நிம்மதியாக இருப்பதை ஏன் கெடுக்கிறீர்கள்'' என்று அர்ஜுனும் திவாரியும் அறிக்கை விடுகிறார்கள்.



**அர்ஜுன் கோஷ்டியுடன் வெளிப்படையாக கைகோர்க்கவும் தயங்குகிறார் சோனியா.**

ஆனால் இவர்களுக்கு சோனியா
ஆதரவு இல்லை என்று காட்டுவது
இதே கருத்துக் கொண்ட அறி
ஒன்றை ராஜீவ் குடும்ப நண்பர்
கூறிக் கொண்டு ராவின் விசுவாசி ஒ
வெளியிட்டபோது அதற்கு சோ
தரப்பில் இருந்து மட்டும் கண்
அறிக்கை வருகிறது.

அப்படியானால், சோனியா
அரசியலில் குதிக்கும் எண்ணம் இரு
றதா? யார் இந்த சோனியா? அவர்
ணதான் விரும்புகிறார்? உண்மையில்
சியலில் இருந்து அவர் வி
நிற்கிறாரா?

இல்லை. அரசியலில் அவர்
போதைக்கு நேரடியாக ஈடுப
தில்லை. ஆனால் காங்கிரசுக்காரர்
டம் நேரு - காந்தி குடும்பத்தின் மீது
அடிமைத்தனமான விசுவாசத்தை
நாட்டு மக்களிடையே செயற்கைய
நிலை நிறுத்தப்பட்டிருக்கும் கவர்ச்சி
யும் தனது சொந்த நலன்களுக்குப் பய
படுத்திக் கொண்டு வரும் ஒரு சட்டபூ
– அதிகார பூர்வமற்ற அதிகார மைய
சோனியா இருந்து வருகிறார். அவ
நிலை ஆட்சிக் காலத்தில் ஆட்சி
பொறுப்பு எதுவும் வகிக்காமலேயே ச
சய் காந்தி அதிகாரம் செலுத்தி வந்ததை
போல.

இல்லையானால் ஒவ்வொரு அர
நிகழ்ச்சிகளிலும் முக்கிய நாயகியா
அவரைக் கொண்டு வந்த நிறுத்துவ
ஏன்? நேரு - காந்தி குடும்ப உறுப்பினர்
ளின் நினைவுநாள், பிறந்தநாள், நினை
வுச் சின்னங்களின் நிறுவன விழா, விருது
கள் 'என்று தவறாது அரசு வானொலி
வானொளி, பத்திரிகைகளில் பிரதானப்ப
டுத்தப்படுவது ஏன்? வெளிநாடுகளில்
இருந்து வரும் அரசியல் - அரசுத் தலை
வர்கள், பிரமுகர்கள் அனைவரும் பிரத
மர், 'குடியரசு'த் தலைவரைப் பார்ப்ப
தோடு சோனியாவையும் சந்தித்து ''மரியாதை'' செலுத்தும் நிகழ்ச்சி தவறாது ஏற்பாடு செய்யப்படுவது ஏன்?

அரசியலில் அக்கறை இல்லாதவர், நாள் முழுவதும் அரசியல்வாதிகளுக்குத் தரிசனம் தருவதும், விவாதிப்பதும் எதற்காக? சோனியாவுக்கு அரசியல் ஈடுபாடு இல்லையென்றால் அவர் நடத்தும் பல அறக்கட்டளைகளுக்குப் பல பெரும் தொழிலதிபர்கள் கோடிகோடியாக அள்ளித் தருவது தயாள - தரும


படிப்பகம்

www.padippakam.com

னயிலா? நேருகாந்தி குடும்பத்தி பெயரால் நடத்தப்படும் பல கோடி ப் அறக்கட்டளைகளுக்குத் தலை கித்துத் தயாள - தரும தேவதை அவதாரம் எடுத்து, அன்றாடம் து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து த அரசு நிறுவனங்கள் பத்திரிக்கை மூலம் விளம்பரமும் செய்வதும் ?

காங்கிரசுக் கட்சிக்குள் ஒரு நெருக் என்றால் முக்கியத் தலைவர்களும் ர்களுடைய தூதுவர்களும் னியா வாசலில் போய் நிற்கிறார்கள். ஜுன்-திவாரி கும்பல் போட்டிக் காங் சுத் தலைமையை அறிவிப்பதற்கு ல்லியில் மாநாடு கூட்டியபோது, தில் சோனியாவோ, அவரது குடும்பத் ரோ பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப் டது. அதற்கேற்ப சோனியா - ராஜீவ் ட்-அவுட்''கள் வைக்கப்பட்டன; வர்களது புகைப்படமேந்திய பேரணி ந்தது; ராஜீவ் கொலைவழக்கில் நரசிம் ராவ் அரசு அக்கறை காட்டவில்லை, ற்றிவாளிகளை - சதிகாரர்களைத் தண் க்கத் தயங்குகிறது என்கிற சோனியா பின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் முழக்கங்களும், கோரிக்கைகளும் இருந் ன.

சோனியா கண்ணசைத்திருந்தால் கணிசமான காங்கிரசு எம்.பிக்கள் போட் டிக் காங்கிரசில் சேர்ந்திருப்பார்கள்; என் றாலும் அர்ஜுன் - திவாரிக்கு கட்சியில் சொற்ப ஆதரவுதான் இருக்கிறது என் பதை உணர்ந்ததும் சோனியா நடுநிலை நாடகமாடினார். கோஷ்டிகளுக்கு அப் பாற்பட்ட பொதுத் தலைவியாகக் காட் டிக் கொண்டு, இரண்டு தரப்பையும் அழைத்து, பிளவைத் தவிர்க்கும்படி நிர் பந்தித்தார். அவரது நிர்பந்தத்தை ஏற்றுக் காங்கிரசின் தலைமைப் பதவியை விட் டுக் கொடுக்க நரசிம்மராவ் மறுத்து விட் டார். இதற்கு எதிராக சோனியா தனது எரிச்சலை வெளிப்படுத்தினாலும், கோஷ்டி சாராமல் இருந்துவிட்டார். ஆனால் அதற்கு ஈடாக சில காரியங்க ளைச் சாதித்துக் கொண்டார். அவரது விசுவாசிகள் ஓரிருவருக்கு மத்திய அமைச்சரவையில் இடம் கிடைத்தது; ராஜீவ் கொலை விசாரணையைத் துரிதப் படுத்தவும், மேற்பார்வையிடவும் அவ ரது விசுவாசி சிதம்பரம் பொறுப்பளிக்கப் பட்டார்.

இருந்தாலும் அரசியலில் குதிக்கும் எண்ணத்தை நேரு - காந்தி குடும்பம் கைவிடவில்லை என்பதை ராவ் கும்ப லுக்கு உணர்த்தவே பிரியங்கா, ராகுலை அனுப்பி ''பூச்சாண்டி'' காட்டுகிறார், சோனியா. அர்ஜுன் - திவாரி கும்ப லைப் போலவே நரசிம்மராவுக்கு எதி ராக சரத்பவார் அணி சேர்ப்பதில் இறங்கி யவுடன் இதையும் ஆதரிப்பது போல்



காங்கிரசு ராஜமாதா மீது ராவ்விற்கு வெறுப்பு ஏன்?

நடந்து கொள்கிறார். ஆனால் எல்லாம் கட்சி ஐக்கியம், தேசிய நலன் ஆகியவற் றுக்காக செய்வதாக நாடகமாடுகிறார்.

கணக்குப் போட்டுத் தான் சோனியா அரசியல் சதுரங்கத்தில் தனது காய்களை நகர்த்துகிறார் என்பது தான் உண்மை. ராஜீவ் கொலைக்குப் பிறகு, அவரது வாரிசு என்கிற முறையில் திடீ ரென்று தானோ, தனது பிள்ளைகளோ அரசியலில் குதித்துவிட்டால், ராஜீவின் எதிரிகள் தம்மீதும் குறி வைத்து விடுவர் என்கிற பயம் ஒருபுறம் இருந்தது. நாடா ளுமன்றத்திலும் காங்கிரசுக்குத் தனிப்பெ ரும்பான்மை இல்லை; ஆகவே ஒரு தற் காலிக ஏற்பாடாகத் தான் (தன்னைக் கட் சித் தலைமை ஏற்கும்படி ஏகமனதாக காங்கிரசுக்காரர்கள் அழைத்தபோது), நேரு - காந்தி குடும்பத்தின் விசுவாசி யான நரசிம்மராவ் பிரதமராக வருவ தற்கு சோனியா ஆதரவளித்தார்.

ஆனால் அரசியல் சகுனி' நரசிம்ம ராவ், அதிகாரத்தைச் சுவைத்ததும், தானும் தனது வாரிசுகளும் விசுவாசிக ளும் கொண்ட கும்பலை உருவாக்கிக் கொண்டு லஞ்ச ஊழல், அதிகார முறை

> அரசியலில் குதிக்கும்
> எண்ணத்தை
> கைவிடவில்லை
> என்பதை ராவ்
> கும்பலுக்கு உணர்த்தவே
> பிரியங்கா, ராகுலை
> அனுப்பி ''பூச்சாண்டி''
> காட்டுகிறார், சோனியா.

கேடுகள் - கிரிமினல் குற்றங்களால் தனி அதிகார மையமாகவும் நிரந்தரமாகவும் நிலைநாட்டிக் கொண்டு விட்டார். தனக்கு அரசியல் ஆசை கிடையாது என்று சோனியா நாடகமாடுவதையே உண்மையானதென்று விளம்பரப்படுத்தி அவருக்கு எதிராகத் தாக்கி வருகிறார்; கூடவே சத்தீஷ் சர்மா, மத்தான் சிங், சிதம்பரம் போன்ற சோனியா விசுவாசிக ளுக்குப் பதவிகள் கொடுத்தும், மறுபுறம் போபர்ஸ் போன்ற ராஜீவ் ஊழல் வழக்கு களைக் காட்டி மிரட்டியும் வருகிறார்.

சோனியாவும் அவ்வப்போது ராவுக்கு எதிராகப் போட்டிக் கும்பல்க ளைக் கிளப்பி விட்டு நிர்பந்தித்து, காரி யங்களைச் சாதித்து வருவதோடு, பொறுப்புக்கள் ஏதுமில்லாமலேயே சட்ட பூர்வமற்ற இன்னொரு அதிகார மைய மாக இருப்பதையே இப்போதைக்கு விரும்புகிறார். அதேசமயம், ராஜீவுக்குப் பிறகு அவரளவுக்கான கவர்ச்சித் தலை வர் எவருமின்றி காங்கிரசு செல்வாக்கி ழந்து வருவதை அறிந்து, தானோ தனது மக்களோ அரசியலில் குதிப்பதற்கான தயாரிப்பு, தருணம் பார்த்துக் கொண்டி ருக்கிறார். சமீபத்திய பிளவின் போது, நூறுக்கும் மேற்பட்ட காங்கிரசு எம்.பிக் கள் சோனியாவிடம் போய் மன்றாடிய தும், சரத்பவாரே அவரது தரிசனத்துக் குக் காத்துக் கிடப்பதும் சோனியாவின் அரசியல் ஆசைக்குத் தூபம் போடுவ தாக உள்ளன.

''காந்தி, நேரு, போஸ், ராஜாஜி, காமராஜர்' போன்ற பெருந்தலைவர்க ளால் தலைமை தாங்கப்பட்ட கட்சி'', ''தேசத்துக்கு சுதந்திரம் வாங்கித் தந்த கட் சி'', ''நூற்றாண்டு விழாக் கண்ட கட்சி'' ''நாற்பதாண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆண்ட கட்சி'' என்றெல்லாம் பீற்றிக்


படிப்பகம்

www.padippakam.com

கொள்ளும் காங்கிரசின் மூத்த தலைவர் ஒருவர் வெட்கமின்றிச் சொல்லுகிறார், ''சோனியா மட்டும் தான் காங்கிரசையும் எங்களையும் காத்திட முடியும். ஆகவே அவரே கட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும்.''

இப்படிச் சொல்வதற்கு, நேரு - காந்தி குடும்ப விசுவாசிகள் கூறும் காரணம் இதுதான்: ''காந்தி - நேரு குடும்பத்தின் மூத்த பிரதிநிதியாக இருப்பதால் கட்சிக்காரர்கள் சோனியாஜி மீது மரியாதையும் பற்றும் வைத்துள்ளனர். ராஜீவ் கொலைக்குப் பிறகு ஏற்பட்ட நெருக்கடியான சமயத்தில் நரசிம்மராவுக்கு அவர் ஒரே ஒரு கடிதம் எழுதினார். அதனால் தான் ராவ் பிரதமராக முடிந்தது. சோனியாஜியின் அந்த சமிக்ஞையினால் தான் பிரதமர் பதவிக்குப் போட்டியாளர்களாக இருந்த சரத்பவாரும் அர்ஜூன் சிங்கும் ஓரங்கட்டப்பட்டனர். ராவுக்குப் பிறகு யார் தலைவராவது என்று சோனியாஜி ஜாடை காட்டினால் போதும் கட்சிக்காரர்கள் அத்துனை பேரும் அவர் பின் மந்தையாகத் திரண்டு விடுவார்கள்.''



ஜெயின் கமிஷன் விசாரணையை வேடிக்கைப் பார்க்க வரும் பிரியங்கா

காங்கிரசுக்காரர்களின் சித்தாந்தப்படி காங்கிரசு இருந்து ஆண்டால்தான் நாடு இருக்கும்; இல்லாவிட்டால் சிதறிப் போகும். அப்புறம் நேரு - காந்தி குடும்பத்தில் யாராவது தலைமையேற்றால் தான் காங்கிரசு இருக்கும்; இல்லாவிட்டால் அழிந்து போகும். அதாவது முன்பு ''இந்திரா தான் இந்தியா, இந்தியாதான் இந்திரா.'' இப்போது ''சோனியாதான் காங்கிரசு, சோனியாதான் நாடு, நாடு தான் சோனியா'' இது காங்கிரசுக்காரர்களின் அடிமைப் புத்தியைக் குறிப்பதாக பத்திரிகைகள் சில எழுதுகின்றன. உண்மையில் அவர்கள் இந்திராவுக்கோ, சோனியாவுக்கோ அடிமைகள் இல்லை. அதிகார வெறிக்கு அடிமையான பாசிஸ்டுகள். இந்திராவோ சோனியாவோ அவர்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத் தரமுடியாவிட்டால் முதுகில் குத்தவும் தயங்க மாட்டார்கள்.

ஆனால் அதிகாரத்தைப் பெறவும், ஆட்சி நடத்தவும் சோனியாவிற்கு என்ன அருகதை இருக்கிறது. ஜெயலலிதா, சிவபார்வதி போன்று பெண் என்பதாலேயே முன்னிறுத்தி கவர்ச்சி அரசியல் மோகம் உருவாக்கி ஆதாயம் தேடும் முயற்சி தான் இது. இந்த நாட்டு மக்களின் யதார்த்த நிலை தேவைகளைக் கொஞ்சமும் அறியாத, இந்த நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் கொள்கை - இலட்சியங்களும் ஏதும் இல்லாத இப்படிப்பட்ட ''கவர்ச்சிப் பாவை''களினால் ''ஜெயா - சசி'' கும்பலைப் போன்ற பகற்கொள்ளையும், கிரிமினல் மய - ஆபாச மய ஆட்சியைத்தான் தர முடியும். சோனியா காந்தி மிகவும் நம்பகமான ஆலோசகர்களாகக் கொண்டிருப்பதும் பாரம்பரிய அனுபவமிக்க அரசியல் தலைவர்களை அல்ல. அமிதாப் பச்சன், சத்தீஷ் சர்மா, ஆர்.கே. தாவன், வி. ஜார்ஜ் போன்ற ஒரு ஒட்டுண்ணிக் கும்பலையும், சிதம்பரம், மணிசங்கர அய்யர் போன்ற அரசியல் தர்கர்களையும் தான். காங்கிரசின் மூத்த தலைவர்கள் ஓட்டுப் பொறுக்குவதற்காக மட்டும் சோனியா காந்தியை ஒரு பொம்மையாக வைத்துக் கொண்டு ஆட்சி நடத்தவே விரும்புகின்றனர். ஆனால், மேற்படி ஒட்டுண்ணி கும்பலின் ஆதிக்கம்தான் மேலோங்கி நிற்கும். அதுமட்டுமல்ல, ராஜீவ் கொல்லப்பட்டபோது கூட, அனுதாப அலை நாடு முழுவதும் வீசிவிடவில்லை. குறிப்பாக உ.பி., பீகார் போன்ற மாநிலங்களில் அது எடுபடவில்லை. ஆகவே, சோனியாவைக் காட்டி அதிகாரத்தைப் பிடிக்கும் காங்கிரசின் கனவும் பலிக்காது. எப்படியானாலும், சித்தாந்தம் 'கொள்கை' கோட்பாடு ஏதுமில்லாத ஜெயலலிதா, சிவபார்வதி, சோனியா, போன்றவர்களை நம்பித் தான் காங்கிரசு மட்டுமல்ல — ''நாடாளுமன்ற ஜனநாயகமே'' நீடிக்க முடியும் என்பதை விட இழி நிலை வேறென்ன இருக்க முடியும்.

● ஆர்.கே.

10-ம் பக்கத் தொடர்

தொலைபேசியகம், கம்பி வலை
கள் முதலானவற்றிற்கு மூலத
தொகையை குறுகிய காலத்திற்கு
மாக எடுத்துவிடவே தனியார் க
கள் முயலும். மேலும் அரசுத் த
வரி இல்லை; தனியார் நிறுவனங்
கட்ட வேண்டியிருக்கிறது. இத
டையில் கணக்கிட்டால் உள்ளூர்
பேசி கட்டணத்தை மூன்று மடங்கு
கூட்ட வாய்ப்புண்டு. இதற்கேற்ப
துறை கட்டணத்தையும் கூட்டச்
நெருக்கடி கொடுத்து சாதித்துக்
வார்கள்.

இதற்கு எந்த கட்சியினர் ஆட
வந்தாலும் பணிந்து போகத்தான்
டும். ஏனெனில் சேவைத் துறையி
னாட்டுக் கம்பெனிகளின் நுழைவ
சின் முக்கிய வருவாயையே இழ
படி செய்துவிடுகிறது. இந்திய தொ
தொடர்புத் துறைக்கு வருமானம் எ
நகரங்களிலும் தொலைதூர தொ
சிகளான ''எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி
லும்தான் அதிகம். இதில் வரும்
யைக் கொண்டு கிராமங்களு
கொடுக்கப்படும் இணைப்புகளு
ஆகும் கூடுதல் செலவுகளை ஈடு செ
றது. அதேபோல் இந்த உபரியிலி
உள்ளூர் தொலைபேசியை சாதாரண
களும் பயன்படுத்துவதற்காக மான
கொடுத்து 1 ரூ. விலைக்குக் கொடு
றது. வருமானமுள்ள நகர்பகுதிகளு
தொலை தூர பேசிகளும் தனியார் செ
ளைக்கு திறந்துவிடப்பட்டுவிட்ட
அரசின் வருமானம் போய் கட்ட
தைக் கூட்டுவதை செய்துதான் தீர வே
டியுள்ளது. மேலும் கிராமபுறங்களு
கான தொலைபேசி இணைப்புக் கொ
கும் திட்டமும் கைவிடப்படும்.

ஆக.... தனியாரை அடிப்பவ
சேவையில் நுழைய அனுமதிக்கும் நா
லிருந்து இந்திய தொலைத் தொடர்
துறையின் அழிவும் சமாதிகட்டு
நாளும் எண்ணப்பட்டுவிடும். போக்கு
ரத்து, மின்சாரம், சாலை, தொலை
தொடர்பு முதல் குடிநீர் - கழிவுநீர் வ
இப்படி உற்பத்தி மற்றும் சேவைத் து
கள் முழுவதையும் பன்னாட்டு கம்பெ
களுக்கு தாரைவார்த்துவிட்டால் இந்தி
அரசு என்று சொல்வதற்கு மிச்சிரு
பவை - போலீசு, ராணுவம், கோர்
சிறை, அதிகார வர்க்கம் மட்டுமே
இவற்றை மக்களை அடக்கி ஒடுக்குவத
காகப் பயன்படுத்துவது மட்டுமே அ
சின் பணியாக இருக்கும். இதை கண்க
ணிக்கும் பொம்மையாக மட்டுமே இ
திய ஆட்சியாளர்கள் இருப்பார்கள்.

● சுப்பு

www.padippakam.com



# தொடரும் குழந்தை விற்பனை நாட்டுக்கே அவமானம்

பஞ்சம் பாரித்த பீகாரின் முசாப்பூர் மாவட்டம் பகாரி கிராமத்தைச் சேர்ந்த சுலேகா என்ற ஏழை விதவைத்தாய், தனது இளம் மகளையும், பேரனையும் 700 ரூபாய்க்கு அண்மையில் விற்பனை செய்துள்ளார். "நாங்கள் ஒருவார காலமாக சாப்பிடவேயில்லை. என் கண்ணெதிரே குழந்தைகள் பட்டினி கிடப்பதை என்னால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. நோயினாலும் பட்டினியாலும் எனது மகள் மாண்ட பிறகு, மகள் வயிற்றுப் பேரனான ஆறுமாதக் கைக்குழந்தையைக் காப்பாற்றவே அவனை ரூ. 400-க்கு விற்றேன். எனது இளம் மகளை மன்ஜித் மிஸ்ரா என்பவருக்கு ரூ. 300-க்கு விற்றேன். இன்று அவர்கள் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். எனது குழந்தைகளைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்று வேதனையோடு கூறுகிறார் அந்த ஏழைத்தாய். இதே போல பீகாரின் கயா, ஔரங்காபாத் மாவட்டங்களிலும் வறுமையின் காரணமாக, பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு தாய்மார்கள் விற்கும் அவலம் தொடர்வதாக செய்திகள் கசிந்துள்ளன.

ஆந்திராவின் கடப்பாவைச் சேர்ந்த மோகன் ரெட்டி - ராஜம்மா தம்பதிகள் தமது சகோதரியின் திருமணத்துக்கான வரதட்சிணை செலவை ஈடுகட்டுவதற்காக, தமது ஒன்பது மாதக் கைக் குழந்தையை



ஒன்றரை லட்ச ரூபாய்க்கு பகிரங்கமாக ஏலம் போட்டு சென்னையில் விற்க முயற்சித்துள்ளனர். சட்டபூர்வமாக தத்து எடுப்பதற்கான பத்திரங்களில் அவர்கள் கையெழுத்திட தயங்கியதால், ஏலம் எடுத்தவர்கள் சந்தேகப்பட்டு போலீசில் முறையிட்ட பிறகு இந்த விவகாரம் வெளியே தெரிய வந்துள்ளது.

இந்தியக் குற்றவியல் சட்டத்தில், பெற்றோர்கள் தமது குழந்தைகளை விற்பதைத் தடுக்க எந்தவொரு விதியோ தண்டனையோ இல்லை. இதனால் போலீசார் இச் சமூகக் கொடுமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் வழியில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நாடெங்கும் பெருகிவரும் வறுமை, பட்டினியின் கோரத்தாக்குதலால் இன்று குழந்தை விற்பனை எனும் அவலம் பற்றிப் படர்ந்து வருகிறது. ஏறத்தாழ ஏழாண்டுகளுக்கு முன்பு, ஒரிசாவின் கலாகந்தி மாவட்டத்தில் வறுமையின் காரணமாக குழந்தை விற்பனை நடந்ததாக செய்தி வெளியானபோது நாடே அதிர்ச்சியடைந்தது. இன்று இத்தகைய அவலம் சர்வசாதாரணமாகிப் போகும் அளவுக்கு நாடெங்கும் அதை விரிவுபடுத்துவதில் காங்கிரசு துரோகிகள் புதிய சாதனை படைத்து வருகிறார்கள்.

# அல்லிராணி ஆட்சியில் ஆரம்பக் கல்விக்கு வேட்டு

மிழகத்தில் கல்வி எக்கேடு கெட்டால் எனக்
ன என்று "செல்வி" ஜெயா கும்பல் புதியவகை
ள்ளையில் ஈடுபட்டு வருகிறது. கடந்த ஆண்டு
லியில் நடந்த முதலமைச்சர் மாநாட்டில் பேசிய
ா, 1994-95-ல் தமிழகத்தில் ஓராசிரியர் பள்ளி
இருக்காது என்று வாக்குறுதி அளித்ததைக் காற்
றக்க விட்டு, ஓராசிரியர் பள்ளிகளைப் பெருக்கி
ாதோடு, ஆசிரியர் நியமனத்திலும் கோடி கோடி
கொள்ளையடித்து வருகிறார். மதுரை மாவட்
மயிலாடும்பாறையிலுள்ள ஆரம்பப் பள்ளியில்
மாணவர்களுக்கு ஓராசிரியரே உள்ளார். முன்பு
மங்கலம், செலம்பட்டி ஒன்றியங்களில் ஓராசிரி
பள்ளிகளே இலை. ஆனால் இப்போது திருமங்
த்தில் 14 பள்ளிகளும், செல்லம் பட்டியில் 7 பள்ளி
ம் ஓராசிரியர் பள்ளிகளாக மாறிவிட்டன. நடப்
ண்டில் 100 தொடக்கப் பள்ளிகளைப் புதிதாக திறக்
போவதாக அரசு கூறுகிறது. ஆனால் மதுரையில்
ள 6 மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்கள்
க்கை குறைந்துவிட்டதாகக் கூறி இப்பள்ளிகளை
விட்டு, அருகிலுள்ள பள்ளிகளுடன் இவற்றைச்
ர்த்துள்ளது. இது பள்ளிகளில், 35 மாணவர்க
க்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தை 50-க்கு ஒரு
என மாற்றி கல்வித்தரத்தை மேலும் சீரழித்து
நகிறது.

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் சுமார்
000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன.
ந்த ஆண்டில் சுமார் 12,000 ஆசிரியர்கள் ஓய்வு
ற உள்ளனர். இது ஒரு புறமிருக்க, 4000 பள்ளிக
ல் போதிய ஆசிரியர்களே இல்லை. இந்நிலையில்
ப்பாண்டில் புதிதாக 8000 ஆசிரியர்களை நியமிக்
போவதாக அரசு கூறுகிறது. ஆனால் ஆசிரியர்
மனத்தில் கோடி கோடியாய் கொள்ளையடிக்க
ய உத்தி ஒன்றை வகுத்துள்ளது. வேலை வாய்ப்ப
த்தில் பதிவு செய்துள்ள, ஆசிரியர் பயிற்சியில்
ர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படை
ல் நியமனம் செய்வதற்கு மாறாக, நேர்முகப் பேட்டி
ுலான விதிகளைப் புகுத்தி இதைச் சாக்கிட்டு
லை தேடும் ஆசிரியர்களிடம் பணம் கறக்கக்
ளம்பியுள்ளது. ஆசிரியர் ஒருவரைப் பணியில்
மர்த்த ரூ. 50,000 என ரகசியமாக விலையும் நிர்ண
யிக்கப்பட்டுள்ளது. 8000 ஆசிரியர் பணிக்கு எனில்
மொத்தம் ரூ. 40 கோடியை இப்படி கொல்லைப்
புறவழியாக ஜெயா கும்பல் சுருட்டியுள்ளது. தமிழகத்தின் இளம் தலை முறையினரைத் தற்குறிகளாக்கிவிட்டு, ஆசிரியர் நியமனத்தின் மூலம் கோடி கோடியாய் கொள்ளையடித்து வரும் பாசிச ஜெயா கும்பலுக்கு எதிராக கல்வியாளர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் அணிதிரண்டு போராட வேண்டிய தருணமிது.



படிப்பகம்

www.padippakam.com

## கராச்சி கலவரம்:
## பெனாசிரின் ஜனநாயக முகமூடி கிழிந்தது

பாகிஸ்தானின் முக்கிய வர்த்தக நகரமான கராச்சி, கடந்த இரு மாதங்களாகத் தொடரும் இனப் போராட்டங்களாலும் இராணுவத்தின் அடக்குமுறையாலும் நிலைகுலைந்து சுடுகாடாக மாறிவருகிறது. கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் கராச்சியில் 366 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இந்திய - பாக். பிரிவினைக்குப் பிறகு இப்படியொரு கோரமான இனவெறிப் படுகொலை நடந்ததில்லை என்று பத்திரிகைகள் அலறுகின்றன.

1947-இல் இந்திய - பாக். பிரிவினையின் போது இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்த முஸ்லிம்கள் "முகாஜிர்" என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் சிந்து மாகாணத்திலும், துறைமுக நகரமான கராச்சியிலும் பெரும்பான்மையாக உள்ளனர். ஆனாலும் இம்மக்கள் இன்று பாக். ஆட்சியாளர்களால் இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்தப்படுகின்றனர். சிந்து மாகாண சட்டசபையிலும் உள்ளூராட்சி அமைப்புகளிலும் பாக். நாடாளுமன்றத்திலும் இம்மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் தரப்படுவதில்லை. கல்வி, வேலைவாய்ப்பு, தொழில் உரிமைகளும் மறுக்கப்பட்டு இவர்கள் பாக். அரசால் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இதனால் "முகாஜிர் குவாமி இயக்கம்" எனும் அமைப்பின் கீழ் இவர்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றனர். பாக். அரசின் இராணுவ அடக்குமுறை காரணமாக முகாஜிர் இயக்கத் தலைவராக அல்டாப் ஹுசைன் இலண்டனிலிருந்து கொண்டு இயக்கத்தை வழிநடத்துகிறார்.

முகாஜிர்களின் உரிமைக்கான போராட்டம் வெற்றி பெற்றால், தாம் சிறுபான்மையினராகி ஒடுக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக சிந்தி இன மக்கள் முகாஜிர்களை எதிர்க்கின்றனர். குறிப்பாக சிந்து மாநிலத்தைச் சேர்ந்த பிரதமர் பெனாசிர் தனது ஓட்டு வங்கியை இழந்து விடாதிருக்க சிந்தி மக்களை முகாஜிர்களுக்கு எதிராகத் தூண்டி விடுகிறார். முகாஜிர் இயக்கத்தையே பிளவுபடுத்தி ஹாகிகி தலைமையிலான ஒரு துரோகக் கும்பலை ஊட்டி வளர்த்து முகாஜிர்களுக்கிடையே மோதலை உருவாக்கி இரத்தம் குடித்து வருகிறார். இதுவன்றி முஸ்லிம்களின் ஷியா, சன்னி பிரிவுகளுக்கிடையேயும் மோதல் தொடர்கிறது. போதை மருந்துக் கடத்தல் இப்பிராந்தியத்தில் கொடிகட்டிப் பறப்பதால் எல்லா குழுக்களும் ஏ.கே. 47 இரகத் துப்பாக்கிகளுடன்தான் திரிகின்றன. இராணுவத்துக்கும் முகாஜிர் இயக்கத்துக்குமிடையேயும், முகாஜிர் இயக்கத்தின் கோஷ்டிகளுக்கிடையேயும், பிற இனத்தவருக்கும் முகாஜிர் இயக்கத்துக்குமிடையேயும் தெருக்களிலும் ஏன், மசூதிகளிலும் நடக்கும் வெறிபிடித்த துப்பாக்கிச் சண்டையால் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் தினமும் பலியாகி வருகின்றனர். பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவி எதிர்த்தரப்பினரைப் பழிவாங்குவது, கைகளைப் பின்புறம் கட்டி கழுத்தை அறுத்து பிணத்தை வீதியில் வீசியெறிவது, உயிரோடு தீயிட்டுக் கொளுத்துவது முதலான காட்டுமிராண்டித்தனங்கள் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன.

கராச்சியில் தொடரும் உள்நாட்டுப் போரினால் பெனாசிர் அரசு தனது கட்டுப்பாட்டையும், ஆதரவையும் மேலும் மேலும் இழந்து தனிமைப்பட்டுப் போயுள்ளது. அதிகாரப் பசிகொண்ட இராணுவம் தனது அடக்குமுறையாலும் இரகசிய சதிகளாலும் கலவரத் தீயில் எண்ணெயை ஊற்றி பெனாசிர் அரசைக் கவிழ்க்கி முயற்சிக்கிறது. போதாக்குறைக்கு,



இந்திய உளவு நிறுவனமான "ரா" தனது இரகசிய ஏஜெண்டுகள் மூலம் பகைமை வெறியோடு கலவரத்தைத் தூண்டி வருகிறது.

உள்நாட்டு போரி
பற்றி எரியும்
கராச்சி நகரம்;
பெனாசிரின்
அடக்குமுறை
வெறியாட்டம்

கிழக்கின் விடிவெள்ளி என்றும் ஜனநாயகத்தின் திருமகள் என்றும் பாக். பிரதமர் பெனாசிரை முதலாளித்துவவாதிகள் ஏற்றிப் போற்றினார்கள். ஆனால் முகாஜிர்களின் மிகச் சாதாரண உரிமைகளைக் கூட பறித்து இராணுவத்தைக் கொண்டு வெறியாட்டம் போடும் அடக்குமுறையாளர்தான் அவர் என்பதை கராச்சிப் படுகொலைகள் நிரூபித்துக் காட்டி விட்டன.

## குடியிருப்போர் மீது பாயும் குண்டர் படைகள்

உத்திரப் பிரதேசத்தில் பெருகி வரும் கிரிமினல் அரசியல்வாதிகள் - மாஃபியா குண்டர்களின் கூட்டுத் தாக்குதலைக் கண்டு அம்மாநிலமே பீதியில் உறைந்து போயுள்ளது. குண்டர்களைக் கொண்டு குடியிருப்பவர்களை அடித்து விரட்டிவிட்டு வீடுகளை ஆக்கிரமித்துக் கொள்ளும் அட்டூழியம் அண்மைக்காலமாக உ.பி.யில் தலைவிரித்தாடுகிறது.

லக்னோ நகரில் வர்த்தக மையமாக உள்ள ஒரு தெருவில், முன்னாள் ராணுவ வீரரின் விதவை மனைவியான புஷ்பா என்பவர், தனது சேமிப்பைக் கொண்டு ஒரு வீட்டைக் கட்டி அதில் வசிந்து வந்தார். கடந்த மே மாத இறுதியில், 20 பேர் கொண்ட ஆயுதந் தாங்கிய கும்பலொன்று அவரையும் அவரது உடமைகளையும் தூக்கியெறிந்து விட்டு அந்த வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டது. உ.பி.யில் அண்மையில் கலைக்கப்பட்ட கூட்டணி ஆட்சியின் சபாநாயகராக இருந்த தனிராம்வர்மாவின் மகன் தலைமையிலான கிரிமினல் கும்பல்தான் இந்த அட்டூழியத்தைச் செய்தது. இதுபற்றி புஷ்பா, போலீசில் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பின்னர் அவர், பகுஜன் சமாஜ் கட்சி ஆதரவில் எம்.பி.யாகியுள்ள பிளேடு கம்பெனி முதலாளியான ஜெயந்த் மல்ஹோத்ராவிடம் அழுது முறையிட்ட பிறகு தான் புஷ்பாவுக்கு மீண்டும் அவரது வீடு கிடைத்தது.


படிப்பகம்

www.padippakam.com

இது மட்டுமல்ல; மேற்கு உ.பி.யின் ஷகரான்பூரில் ஓய்வு பெற்ற நீதிபதியான கே.சி. கோவில் என்பவரது வீட்டை பகுஜன் சமாஜ் கட்சிக் குண்டர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். வீட்டிலிருந்து நகைகளைக் கொள்ளையடித்து, அவரது மாருதி காரைத் தீயிட்டுக் கொளுத்தி அவரையும் குடும்பத்தையும் அடித்து விரட்டினர். இது பற்றி அவர் போலீசில் முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை. அதே சமயம் குண்டர்களுடன் ஒத்துழைக்க மறுத்ததற்காக கீழ்நிலை போலீசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரு மாதங்களில் லக்னோ, ஷகரான்பூர், பெரெய்லி, முசாபர் நகர், மீரட், அலகாபாத், புலந்த்சாகர் முதலான நகரங்களில் இதே போல 200-க்கும் மேற்பட்ட அட்டூழியங்கள் நடந்துள்ளன. சமாஜ்வாடி கட்சி எம்.எல்.ஏ-க்களான அதிக் அகமது, சர்வராஜ் சிங், பகுஜன் கட்சி மந்திரியான ராம் லக்கான் வர்மா முதலானோர் நேரடியாகவே தமது குண்டர்களுடன் சென்று வீடுகளை ஆக்கிரமித்துள்ளனர். ''பெரிய மாநிலத்தில் சில நூறு வீடுகள் ஆக்கிரமிக்கப்பட்டதற்கு ஏன் இப்படி பெருங்கூச்சல் போட வேண்டும்?'' என்று கிரிமினல்களின் கொட்டத்தை நியாயப்படுத்துகிறார் மாநில சமாஜ்வாடி கட்சித் தலைவரான ராம்சரண்தாஸ். ''சமூக நீதிக்கான ஆட்சி''யாக சித்தரிக்கப்பட்ட சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கூட்டணி ஆட்சியின் முக விலாசம் இதுதான்!

## தமிழகத்துக்கு ஒரு பிரேமானந்தா ம.பி.க்கு ஒரு சன்மதிசாகர்

இந்தியாவின் தொன்மையான மதங்களுள் ஒன்றான சமண மதத்தின் ''திகம்பர்'' எனப்படும் நிர்வாணப் பிரிவைச் சேர்ந்த மதிப்புமிக்க சாமியார், ஆச்சார்ய சன்மதி சாகர். இவர் மத்தியப் பிரதேசத்திலுள்ள குவாலியர் நகர் அருகே சோனாகிர் எனுமிடத்தில்



காமவெறி சமண சாமியார் சன்மதிசாகர்; உள்ளே பாதிக்கப்பட்ட பெண் சீடர்.

ஆசிரமம் ஒன்றை நடத்தி வருகிறார். இந்த ஆசிரமத்தில் இருந்த சான்யம் புஷன் என்ற 23 வயதான பெண் சீடரை மிரட்டிப் பணிய வைத்து தகாத உறவு கொண்டுள்ளார் என்று இவர் மீது இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சான்யம் புஷனும், சுனிதா மற்றும் ஷ்ரத்தா புஷன் எனுமிரு சீடர்களும் ஆசிரமத்தை விட்டு வெளியேறி சமண மதத் தலைவர்கள் காம வெறி பிடித்த சன்மதி சாகரை விசாரித்துத் தண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர். தங்கள் மதத்திலும் ஒரு பிரேமானந்தாவா? என்று சமணர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

சாமியார் சன்மதிசாகர் தன்னை மிரட்டி பலவந்தமாக மூன்று முறை உறவு கொண்டதாக வேதனையுடன் கூறுகிறார் சான்யம் புஷன். இரண்டாம் முறையாகத் தனது கர்ப்பத்தைக் கலைக்க குவாலியரிலுள்ள ரஜினி ஜெயின் எனும் மருத்துவரிடம் வந்தபோது, அவர் கொடுத்த தைரியத்தினால்தான் சான்யம் புஷனும் மற்ற இரு பெண் சீடர்களும் சாமியாரின் கபட வேடத்தை அம்பலப்படுத்தியுள்ளனர். இவர்கள் போலீசிடம் முறையிடாததால் காமவெறி சாமியார் இன்னமும் கைது செய்யப்படவில்லை. தனது வளர்ச்சியையும் செல்வாக்கையும் கண்டு பொறாமையினால் எதிரிகள் இவ்வாறு வீண்பழி சுமத்துவதாகக் கூறும் இச்சாமியார், ஆசிரமத்திலுள்ள பெண் சீடர்களுக்கு பல ஆண்களுடன் தொடர்பு இருந்ததாகவும், அதனால்தான் இவர்களை ஆசிரமத்தை விட்டு வெளியேற்றியதாகவும் பிரேமானந்தா பாணியில் கூசாமல் புளுகி வருகிறார்.

தான் வளர்க்கும் சிங்கக் குட்டிகள் புலால் சாப்பிடாதென்றும், செவ்வாய் தோறும் அவை விரதமிருப்பதாகவும் சரடுவிட்டு சிங்கரத ஊர்வலம் நடத்தி பல்கலைக்கழகம் கட்ட ஒருகோடி ரூபாய் அளவுக்கு இச்சாமியார் வசூல் செய்துள்ளார். இவரது தலைமையின் கீழான நாடு முழுவதுமுள்ள 350 பள்ளிகளில் தனது நெருங்கிய உறவினர்களையே நிர்வாகிகளாக நியமித்துள்ளார். இவர் மதத் தலைவராக வளர்ந்த பிறகு, சாதாரண நிலையிலிருந்த இவரது குடும்பம் இன்று ஆடை ஏற்றுமதித் தொழிலில் கொடிகட்டிப் பறக்கிறது. 1980-களில் இவர் சாமியாராவதற்கு முன்பு ஒரு பெண்ணை கர்ப்பவதியாக்கி விட்டு ஓடினார் என்றும் சோனாகிர் என்ற ஊரை விட்டு துரத்தியடிக்கப்பட்டார் என்றும் இம்மோசடி சாமியார் பற்றி இப்போது செய்திகள் கசிந்துள்ளன. மோசடியை மூலதனமாக்கி சொத்து சுகங்களுடன் ஆண்டு அனுபவிப்பதும், பெண்சீடர்களை மிரட்டி காம வெறியாட்டத்தில் மூழ்குவதும் விதிவிலக்கின்றி எல்லா மதச் சாமியார்களின் 'புனிதக் கடமை'யாக மாறிவிட்டது.

## இற்றுவிழும் 'மார்க்சிஸ்டு' மணற்கோட்டை

மே. வங்கத்தில் கடந்த மே மாத இறுதியில் நடைபெற்ற 75 உள்ளூராட்சிகளுக்கான தேர்தலில் ஆளும் 'மார்க்சிஸ்டு' கூட்டணி பெருத்த தோல்வியைச் சந்தித்துள்ளது. கோஷ்டிப் பூசலில் சிக்கி நடைபிணமாகக் கிடந்த காங்கிரசுக் கட்சியோ, முன்னைவிட ஒரு மடங்கு அதிகமான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 1990-இல் வெற்றி பெற்ற 16 இடங்களையும் காங்கிரசுக் கட்சி தக்க வைத்துக் கொண்டுள்ளதோடு, புதிதாக 16 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. 'மார்க்சிஸ்டு'களோ தமது முந்தைய செல்வாக்கையும் இழந்து 43 உள்ளூராட்சிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர்.

மே. வங்கத்தில் சோமன் மித்ரா கோஷ்டி, மம்தா பானர்ஜி கோஷ்டி என இரு கூறுகளாக காங்கிரசு பிளவு பட்டுக் கிடக்கிறது. உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரத்துக்கு மம்தா பானர்ஜியும் வரவில்லை. இது தவிர, காங்கிரசு அதிருப்தி வேட்பாளர்களும்


படிப்பகம்

www.padippakam.com



தேர்தலில் போட்டியிட்டனர். இத்தனைக்கும் பிறகும் காங்கிரசுக் கட்சி முன்னை விட அதிக இடங்களில் வெற்றி பெற்று கட்சித் தலைவர்களையே ஆச்சரியப் பட வைத்துள்ளது. ஆனால் இதை காங்கிரசின் கொள்கை - நடைமுறைக்குக் கிடைத்த வெற்றியாக கருத முடியாது. ஆளும் 'மார்க்சிஸ்டு'கள் மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ள மக்கள், மாற்றுத் தீர்வு தெரியாத நிலையில் எதிர்க்கட்சியான காங்கிரசை வெற்றி பெறச் செய்துள்ளனர். அந்த அளவுக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் மக்களிடம் அம்பலப் பட்டு தனிமைப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் கொடுக்காமல் எந்த வேலையும் நடக்காது என்கிற அளவுக்கு ஊள்ளூராட்சிகளில் புழுத்து நாறும் ஊழல், 'மார்க்சிஸ்டு'களுக்கும் வீட்டு மனை மாஃபியாக்களுக்கும் இடையிலான கள்ளக் கூட்டு காரணமாக வீடின்றித் தவிக்கும் அடித்தட்டு மக்களின் ஆத்திரம், அடிப்படைத் தேவைகளை அறவே புறக்கணித்து வருவதால் ஆளும் 'இடது' முன்னணி மீது மக்களது வெறுப்பு - முதலான அனைத்தும் சேர்ந்து போலிக் கம்யூனிஸ்டுகளை மக்கள் வஞ்சம் தீர்த்து இத் தேர்தலில் தோல்வியடையச் செய்துள்ளனர். ''மலிந்து விட்ட ஊழல், அதிகார முறைகேடுகளால் மக்கள் வெறுப்படைந்துள்ளதையே இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன'' என்று வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளார், 'மார்க்சிஸ்டு' எம்.பி.யான ஹன்னன் மொல்லா. அடுத்து ஜூலையில் நடைபெறவுள்ள கல்கத்தா நகராட்சித் தேர்தலும் காலைவாரிவிடுமோ என்கிற பீதியில், ''மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல் நாங்கள் தவறு செய்து விட்டோம்; அதைத் திருத்திக் கொள்கிறோம்'' என்று சுயவிமர்சன நாடகமாடுகிறார் 'மார்க்சிஸ்டு' மந்திரியான புத்ததேவ் பட்டாச்சார்யா.

''இடதுசாரி ஆட்சியின் மூலம் மக்களுக்கு இடைக்கல நிவாரண உதவிகளைச் செய்வோம்; புரட்சிக்கு அணிதிரட்டுவோம்!'' என்றும் ''வங்கத்தைப் பார்!'' என்றும் 18 ஆண்டுகளாக இப்போலிகள் ஓயாமல் கூப்பாடு போட்டு வந்தனர். அத்தனையும் மோசடி - பித்தலாட்டம் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் நிரூபித்துக் காட்டி விட்டது.

## அணு மின்நிலையங்களின் சாவு வியாபாரம்

**ப**ம்பாய் அருகிலுள்ள தாராப்பூர் அணு மின் நிலையத்திலிருந்து கதிரியக்கத் தன்மை கொண்ட நீர்க்கசிவு ஏற்பட்டு, கழிவுநீர் கால்வாய் வழியாக வெளியேறியுள்ளதையடுத்து சுற்றுப்புற கிராம மக்கள் பீதியில் உறைந்து போயுள்ளனர். தாராப்பூர் அணு மின் நிலையத்தில் உள்ள கதிரியக்கத் தன்மை கொண்ட கழிவு நீரைச் சுத்திகரிக்கும் பிரிவில் உள்ள குழாய்களில் விரிசல் ஏற்பட்டு இந்த விபத்து நடந்துள்ளதாக நிர்வாகம் கூறுகிறது. இதையும் கூட விபத்து நடந்து 45 நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் கண்டறிந்துள்ளது. கழிவு நீரிகல் கதிரியக்கத் தன்மை வழக்கத்தை விட அதிகமாக உள்ளதை மார்ச்-ஏப்ரல் மாதங்களிலேயே கண்டறிந்துள்ள போதிலும் நிர்வாகம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மெத்தனமாகவே இருந்துள்ளது.

கால்வாய் வழியாக வெளியேற்றப்பட்ட கதிரியக்கத் தன்மை கொண்ட கழிவு நீர் அருகிலுள்ள கிவாலி கிராமத்தையும் அப்பகுதியின் நிலத்தடி நீரையும் பாதித்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் இப்பகுதி வாழ் மக்களுக்கும் மற்றும் பிற இயற்கை வளங்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைப் பற்றி முன்கூட்டி இப்போதே கூற முடியாது என்பதுதான் மிகவும் வேதனையானது. ஏனெனில் கதிரியக்கத் தாக்குதலின் கோரமான விளைவுகள் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னரே தெரிய வரும்.

கதிரியக்கத் தாக்குதலின் விளைவாக சுற்றுப்புற கிராமங்களில் அண்மையில் கால்நடைகள் மாண்டு வருகின்றன. தலைமுடி கொட்டுவதாகவும் தோலில் அரிப்பு ஏற்படுவதாகவும் கிராம மக்கள் வேதனையுடன் கூறுகிறார்கள். இவை கடுமையான வெய்யிலினால் ஏற்பட்டுள்ள பாதிப்புதான் என்று அணுமின் நிலைய நிர்வாகம் மழுப்புகிறது. கிவாலி கிராம மக்கள் தாராப்பூர் அணுமின் நிலையத்தின் அருகிலுள்ள கிணற்றிலிருந்து குடிநீர் எடுத்துச் செல்வதைத் தடுக்கவும் அது முயற்சிக்கவில்லை. கதிரியக்கத்தால் இப்பகுதி வாழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பதை மருத்துவர்களைக் கொண்டு சோதிக்கவும் அரசும் நிர்வாகமும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த மூன்றாண்டுகளில் தாரய்பூரில் நடந்துள்ள இரண்டாவது விபத்து இது. கடந்த ஈராண்டுகளில் இந்திய அணுமின் நிலையங்களிலும் ஆராய்ச்சிக் கூடங்களிலும் 124 விபத்துக்கள் நடந்துள்ளன.



அணுக் கதிரியக்கத் தாக்குதலால் மாண்டு போன எருமையின் மண்டையோடு

சென்ற ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் கட்டப்பட்டு வரும் கைகா அணு மின்நிலையத்தின் அணுவைப் பிளக்கும் மையப்பகுதி இடிந்து விழுந்தது. கல்பாக்கத்தில் மின்சாரம் உற்பத்தியாகும் சுழற்சக்கரப் பகுதியிலேயே விரிசல் ஏற்பட்டுள்ளது. நரோரா அணு மின்நிலையத்தில் இவ்விரிசல் காரணமாக தீ விபத்து கூட ஏற்பட்டது.

இருப்பினும், கோரமான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக மனித உயிர் பறிக்கும் பலி பீடங்களாக உள்ள அணு மின்நிலையங்களைக் கட்டிக் காப்பதில்தான் இந்திய ஆட்சியாளர்கள் குறியாக உள்ளனர். பாகிஸ்தானுக்குப் போட்டியாக அணுவாற்றல் மிக்க வல்லரசாக இந்தியாவை மாற்றும் வெறியோடு கோடி கோடியாக இத்துறையில் கொட்டப்படுகிறது. மக்களை சவக்குழிக்கு அனுப்புவதுதான் ஆட்சியாளர்களின் அணுக்கொள்கை என்பதை பெருகி வரும் அணு மின்நிலைய விபத்துகள் தெளிவாக நிரூபித்துக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## வடகிழக்கு மாநிலங்கள்:

# துப்பாக்கி முனையில் ஒருமைப்பாடு!

நமது நாட்டின் வடகிழக்கிலுள்ள ஏழு மாநிலங்களும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிதானா அல்லது காலனியா எனச் சந்தேகம் கொள்ளுமளவு இராணுவத்தின் — துணை இராணுவப் படைகளின் அட்டூழியங்கள் அம்மாநிலங்களில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மக்கள் வாழும் பகுதிகளில் அந்நிய இராணுவம் படையெடுத்ததைப் போன்று பீரங்கி தாக்குதல் நடத்தியும் மரண தண்டனைக் கைதிகளைப் போன்று பொது மக்களை வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுத் தள்ளியும், தான் அடைந்து வரும் தோல்விகளுக்கு அப்பாவிகளைப் பழி வாங்கி வருகின்றன இக்கூலிப் படைகள். ஆளும் காங்கிரசு கும்பலால் கூட நியாயப்படுத்த முடியாத இந்த மிருகத்தனமான தாக்குதல்கள் மெல்ல மெல்ல கசிந்து, வெளியுலகுக்குத் தெரியத் தொடங்கியுள்ளன.

● மார்ச் மாதம் 5-ந் தேதியன்று மதியப் பொழுதில் நாகலாந்து மாநிலத் தலைநகர் கோகிமாவின் மையப் பகுதியான "பி.ஓ.சி" எனுமிடத்தில் வந்து இறங்கியது தேசிய துப்பாக்கிப் படை. வர்த்தகக் கடைகளும் குடியிருப்புகளும் சூழ்ந்த அப்பகுதி அடுத்த இரண்டு மணி நேரத்திற்குள் மனித ஓலங்கள் நிறைந்த சுடுகாடாக மாறிப் போனது. நவீன இயந்திர துப்பாக்கிகளைக் கொண்டு பயந்தோடிய பொது மக்களை சுட்டுக் கொன்றதோடு கையெறி குண்டுகள், பீரங்கிகளைக் கொண்டும் தாக்கியது அப்படைப் பிரிவு.

இத்தாக்குதலில் எட்டு அப்பாவிகள் தங்கள் உயிரைப் பறி கொடுத்தனர்; இறந்து போனவர்களுள் குழந்தைகள் இருவர். தாக்குதலை முடித்த கையோடு 17 பேரைக் கைது செய்து கொண்டு சென்று சித்திரவதைக் கூடங்களில் தள்ளியது அப்படைப் பிரிவு.

"மறைந்திருந்து தாக்கிய தீவிரவாதிகளை முறியடிக்கவே படைப் பிரிவினர் துப்பாக்கி சூடு நடத்தியதாக"த் தனது செயலுக்கு நியாயம் கற்பித்தார் தேசிய துப்பாக்கி படைப்பிரிவு அதிகாரி. ஆனால் இந்த அண்டப்புளுகை மாநில காங்கிரசு நிர்வாகம் கூட ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. "டயர் ஒன்று வெடித்ததில் ஏற்பட்ட பீதியில் துணை இராணுவப் படையினர் இந்த வன்செயலில் ஈடுபட்டதாக" மாநில உயர் போலீசு அதிகாரிகள் கூறுகின்றனர். ஆளும் காங்கிரசும் எதிர்க்கட்சிகளும் சட்டசபையிலேயே இந்த அட்டூழியத்தைக் கண்டித்திருப்பதோடு, உயர் விசாரணைக் கமிட்டியொன்றினையும் அமைத்துள்ளனர். "தேசிய மனித உரிமை கமிஷன் இந்த அத்துமீறலை விசாரிக்க வேண்டும்" என்றும் கோரியுள்ளனர்.

∴ ∴ ∴

இன்று வடகிழக்கு இந்தியாவின் ஏழு மாநிலங்களில், வீதியில் இறங்கையில் இராணுவத்தின் துப்பாக்கி முனையோடு மோதிக் கொள்ளாமல் யாரும் ஒரு நாளைக் கூட கழித்து விட முடியாது. மத்திய ரிசர்வ் போலீஸ் படை, எல்லை பாதுகாப்பு படை, அஸ்ஸாம் மற்றும் தேசிய துப்பாக்கி படைப் பிரிவு, பஞ்சாப் அதிரடிப் படையினர் என சகல விதமான படைப்பிரிவினரும் "தீவிரவாதிகளை ஒடுக்குவது" என்ற பெயரில் இறக்கிவிடப்பட்டுள்ளனர். "பஜ்ரங் நடவடிக்கை", "காண்டாமிருக நடவடிக்கை", "புரட்சி நடவடிக்கை", "நீலப்பறவை நடவடிக்கை", "தங்கவாத்து நடவடிக்கை" இவையாவும் கடந்த நான்கு வருடங்களுள் தீவிரவாதிகளை அழித்தொழிக்க எடுக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள். போடா தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பொழுது (புரட்சி நடவடிக்கை) அஸ்ஸாமின் இரு மாவட்டங்களில் மட்டும் கிட்டத்தட்ட 15000 படை வீரர்களை இறக்கி விட்டது மத்திய அரசு.




மேலும் இராணுவத்தினர் தடையின்றி அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட வசதியாக அவர்களுக்கு சிறப்பு உரிமைகள் வழங்கியும், போராளிகளின் செல்வாக்கு வலுவாக இருக்கும் பகுதிகளைக் கலவரப் பகுதியாக அறிவித்தும், அடிக்கடி ஊரடங்கு உத்தரவுகளை அமுல்படுத்தியும் பொதுமக்களின் அடிப்படை சனநாயக உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் மத்தியில் எழுந்துவரும் எதிர்ப்புணர்வைக் கண்டு அஞ்சும் இராணுவம், "மணிப்பூர் - நாகலாந்து மாநிலங்களின் சிவில் நிர்வாக அமைப்புகளைக் கலைக்க வேண்டும்; அவ்விரண்டு மாநிலங்களைக் கலவரப்பகுதியாக அறிவித்துத் தனது கைகளில் தர வேண்டும்" என மைய அரசை நிர்ப்பந்தித்து வருகிறது.

வடகிழக்கிந்தியாவின் ஏழு மாநிலங்களிலும் இன்று 17-க்கும் அதிகமான போராளி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. காண்டாமிருக நடவடிக்கையின் மூலம் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி (அல்பா) மீண்டும் உயிர்பெற்று எழுந்துள்ளது. அருணாச்சல பிரதேசத்திலும் மேகாலயாவிலும் கூட தற்பொழுது போராளி குழுக்கள் செயல்படத் துவங்கிவிட்டன.

இந்தியாவில் இருந்து தனித்ததொரு தேசிய இன அரசாகப் பிரிந்து செல்லுதல், தனி மாநிலக் கோரிக்கை, சுயாட்சி கவுன்சில்களை அமைக்கக் கோருவது போன்ற பல தரப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து இக்குழுக்கள் போராடி வருகின்றன. இவற்றுள் நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் (ஐசக்) மக்கள் விடுதலை முன்னணி (மணிப்பூர்), அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி - இம்மூன்றும் இந்தியாவின் தேசிய இன ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை பெறுவதைத் தங்களது குறிக்கோளாகக் கொண்டுள்ளன. மேலும் இக்குழுக்களுள் பெரும்பான்மையானவை ஒன்றிணைந்து "ஏழு சகோதரிகளின் ஐக்கிய விடுதலை முன்னணி" என்ற அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

சமீபத்தில் மியான்மர் (பர்மா) நாட்டு இராணுவத்துடன் இணைந்து, அந்நாட்டின் எல்லையையொட்டிய மிஜோரம் காடுகளில் "தங்க வாத்து நடவடிக்கை" என்ற பெயரில் தாக்குதலொன்றைத் தொடுத்தது இந்திய இராணுவம். இதற்காக மியான்மர் இராணுவ சர்வாதிகாரிகளை சர்வதேச அரங்குகளில் விமர்சிப்பதில்லை என்றும் உறுதி கூறியுள்ளது ராவ்


படிப்பகம்

www.padippakam.com

அரசு. இத்தாக்குதலின் பொழுது நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் (ஐசக்) மணிப்பூர் விடுதலை முன்னணி, அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி குழுக்களைச் சேர்ந்த 39 போராளிகளைக் கொன்றுவிட்டதாகவும், 76 போராளிகளையும் பல தரப்பட்ட ஆயுதங்களையும் கைப்பற்றி விட்டதாகவும் இந்திய இராணுவம் கூறியது. மேலும் இதன் மூலம் எதிர்வரும் மழைக்காலத்தில் போராளிகள் செயல்பட முடியாதவாறு முடக்கிவிட்டதாகவும் பெருமிதம் கொண்டது.

ஆனால் இதே சமயத்தில் வடகிழக்கு மாநிலங்களையும் மேற்கு வங்கத்தையும் இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அசாமின் வடக்கு கசார் குன்றுகளில் அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி தனது மறைவிடங்களை மாற்றிக் கொண்டது. இதோடு, இப்பகுதியின் இராணுவ தளத்துக்கு அருகாமையிலுள்ள இந்திய அரசு வங்கிக் கிளையொன்றில் 31 லட்சம் ரூபாயைக் கொள்ளையடித்துத் தப்பியும் விட்டது. இப்படி போராளி குழுக்களின் செல்வாக்கை வளர விடாமல் கட்டுப்படுத்தவோ, அவர்களின் கொரில்லா தாக்குதல்களைச் சமாளித்து வெற்றி காணவோ முடியாத இராணுவத்தினர் தங்களின் ஆத்திரத்தைப் பொது மக்களின் மீது திருப்பி பழி தீர்த்துக் கொள்கின்றனர்.




தனி மாநிலம் கேட்டுப் போராடும் போடோ இளைஞர்கள்

● கடந்த டிசம்பர் மாதம் 27-ந் தேதி நாகலாந்திலுள்ள மோகாக்சங் எனும் சிறு நகரத்தில் இரு இராணுவத்தினர் நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் (ஐசக்) குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனால் இராணுவம் வெறிகொண்டு 6 பேரைச் சுட்டுக் கொன்றும், இன்னும் இருவரை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தியும் வெறியாட்டம் போட்டது. இத்தாக்குதலில் 42 வீடுகளும் 17 வாகனங்களும் தீயில் எரிந்து சாம்பலாயின.

● இச்சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே, மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் மத்திய ரிசர்வ் போலீசு படையினர் தங்கள் சகாவை போராளிகள் தாக்கி காயப்படுத்தியதற்காக, அந்நகரைச் சேர்ந்த ஒன்பது பேரை வரிசையாக நிற்க வைத்து இராணுவத்தில் மரண தண்டனை அளிப்பது போல மிக அருகாமையில் இருந்து சுட்டுக் கொன்றனர்.

கடந்த சனவரி மாதம் 7-ந் தேதி நடந்த இப்படுகொலை சம்பவத்தை அம்மாநில மக்கள் "ஆர்.எம்.சி. படுகொலை" என அழைக்கின்றனர். இதைக் கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி போலீசாரால் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது.

மறுநாள் போராளி குழுக்களும் மனித உரிமை அமைப்புகளும் இணைந்து மாநிலமெங்கும் கடையடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. மாநில காங்கிரசு நிர்வாகம், "மத்திய ரிசர்வ் போலீசு படையையும், இராணுவ சிறப்பு சட்டங்களையும் திரும்பப் பெறக் கோரி பிரதமரை வலியுறுத்துமளவு" இச்சம்பவம் மணிப்பூரில் கொந்தளிப்பை உருவாக்கியது. இம்மாநிலத்தில் மட்டும் 1974-ஆம் ஆண்டு தொடங்கி இதுநாள் வரை 53 சம்பவங்களில் இராணுவம் அத்துமீறி நடந்திருப்பதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

மலைகளும் காடுகளும் சூழ்ந்து செய்தி தொடர்பு - போக்குவரத்து வசதிகள் அற்றிருப்பது; சனநாயக மற்றும் மனித உரிமை அமைப்புகள் பரந்த அளவில் செயல்படாதது; அரசும் இராணுவமும் கூறுவதையே 'தேசிய' பத்திரிகைகள் வாந்தியெடுப்பது - இவை போன்ற காரணங்களால் காஷ்மீரைப் போல இம்மாநிலங்களில் நடைபெறும் இராணுவத்தினரின் அட்டூழியங்கள் வெளியுலகிற்கு உடன் தெரிந்து விடுவதில்லை.

⁂ ⁂ ⁂

அந்நியர்கள் - அதாவது வங்காள தேச முஸ்லீம்கள் ஊடுருவியிருப்பது, பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.ன் தூண்டுதல் இவையிரண்டும் தான் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதம் பரவுவதற்குக் காரணங்கள் என்கின்ற மைய அரசும் பல்வேறு ஓட்டுக் கட்சிகளும்.

தீவிரவாதத்தை முறியடிக்க இம்மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடப் போவதாக கடந்த இரண்டு ஆண்டுகளாக மார்தட்டி வருகிறது, ராவ் அரசு. ஆனால், ஆரம்ப சுகாதார நிலையங்களே செயல்படாத காரணத்தினால் இந்த ஆண்டின் துவக்கத்தில் 200-க்கும் அதிகமானோர் மலேரியா நோயினால் இம்மாநிலங்களில் இறந்து போயினர். சாலை போக்குவரத்து, மின்சாரம், கல்வி, தொலை தொடர்பு போன்ற அடிப்படையான வசதிகளும் இம்மாநிலங்கள் எங்கிலும் முழுமையாக செய்து தரப்படவில்லை. இதனால், நிரந்தர வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையில் தொழிற்துறை வளர்ச்சி ஏற்படாது முடக்கப்பட்டு விட்டது.

வடகிழக்கு மாநிலங்களில் கிடைக்கும் மரம், கச்சா எண்ணெய், யுரேனியம் போன்ற இயற்கை வளங்களைக் கொள்ளையிடுவது மட்டும்தான் மைய அரசின் குறியாக இருந்து வருகிறது. காங்கிரசு கட்சியே, "ஒப்பந்தக் காரர்களின் பொருளாதாரம்" எனக் கிண்டலாகக் கூறத்தக்க வகையில்தான் மைய அரசின் 'வளர்ச்சி'த் திட்டங்கள் உள்ளன.

அதே பொழுதில் வடகிழக்கு பகுதி இந்தியாவில் இருந்து பிரிந்து போகாமல் இருக்கவும் மாநில அரசு அதிகாரம் தனது கையை மீறிச் சென்றுவிடாமல் இருக்கவும் மைய மற்றும் மாநில காங்கிரசு நிர்வாகங்கள் செய்து வரும் சூழ்ச்சிகளும் தகிடுதித்தங்களும் ஏராளம்.

ராஜீவ் காந்தி லால் டெங்கா என்ற துரோகியை உருவாக்கி, "மிஜோ ஒப்பந்த"த்தில் கையெழுத்திட்டார். ராஜீவ் வழி வந்த ராவ், போடா ஒப்பந்தத்தை அமுல்படுத்த தனி மாநிலம் கேட்டுப் போராடும் "போடா பாதுகாப்புப் படை"யைப் பிளந்து, பிரேம்சிங் பிரம்மா என்ற தலையாட்டி பொம்மையை உருவாக்கியுள்

படிப்பகம்



**ரோந்து சுற்றும் பஞ்சாப் அதிரடிப்படையினர் - அறிவிக்கப்படாத ராணுவ ஆட்சி.**

ளார். அசாமில் சரணடைந்த ''அல்பா'' போராளிகளைக் கொண்டும், நாகலாந்தில் நாகா தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் (கே) என்ற போட்டி குழுவை உருவாக்கியும் களத்தில் நிற்கும் போராளிகளைக் கொன்றொழித்து வருகின்றன, மாநில காங்கிரசு நிர்வாகங்கள். மேலும் நாகலாந்தில் ''குக்கி விடுதலைப் படையை'' உருவாக்கி நாகா - குக்கி இன மோதல்களையும் தூண்டி விட்டு வருகிறார்கள், அம்மாநில மந்திரிகள்.

பல்வேறு இனக் குழுக்கள் - மலைவாழ் மக்கள் மத்தியில் செல்வாக்குமிக்கவர்களை வளைத்துப் போட்டு ஓட்டுப் பொறுக்குவதை ஒரு தந்திரமாகவே கடைப்பிடித்து வருகிறது, காங்கிரசு. தற்பொழுது காங்கிரசும் பாரதீய ஜனதாவும் வங்காள தேச முஸ்லீம்கள் அகதிகளாக இம்மாநிலங் களில் தஞ்சம் அடைந்திருப்பதை ஊதிப் பெருக்கியும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய மலைவாழ் மக்களுக்கு எதிராகவும் இந்துமதவெறியை வளர்த்து விட முயலுகின்றன.

வட கிழக்கிந்தியாவைச் சேர்ந்த பூர்வ குடிகள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். வரலாற்று ரீதியாகவே இம்மக்களின் மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறையனைத்தும் பிற இந்திய பகுதிகளில் வாழும் மக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது. பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டங்களின் பொழுது கூட, இவர்கள் காந்தி - காங்கிரசின் தலைமையை ஏற்றுக் கொள்ளவில்லை. அஸ்ஸாமியர்கள், மிஜோ போன்ற தேசிய இனங்களோடு நாகா, குக்கி, மெய்தி, போரா போன்ற பல்வேறு சிறிதும் பெரிதுமான இனக் குழுக்களும் இம்மாநிலங்கள் எங்கிலும் குறுக்கும் நெடுக்குமாகப் பிண்ணிப் பிணைந்து வாழ்கின்றனர். ஆனாலும் இப்பகுதிகளில் குடியேறியுள்ள மார்வாரிகளும் வங்காளிகளும் தான் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

இந்தியாவின் தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்து நாற்பதாண்டு காலமாக ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நிற்கும் இக்குழுக்கள், மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இருப்பதுடன், அவர்களை அணிதிரட்டி அரசியல் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகிறார்கள். வடகிழக்கு இந்தியாவையும் மேற்கு வங்கத்தையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் சாலைப் போக்குவரத்தைத் தடை செய்வதை முக்கிய போராட்ட ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள், இப்போராளிகள். மணிப்பூரில் ஐக்கிய தேசிய விடுதலை முன்னனணியினர் இளைஞர்களைச் சீரழிப்பதற்காக மைய அரசினால் திட்டமிட்டு இறக்கிவிடப்படும் ஆபாச திரைப்படங்கள் - புகைப்படங்கள் - புத்தகங்களைக் கைப்பற்றி தலைநகர் இம்பாலில் மாநில போலீசு தலைமையகத்துக்கு எதிரிலேயே தீயிட்டுக் கொளுத்தினர்; பெண்கள் மீது ஏவிவிடப்படும் பாலியல் குற்றங்களைப் போராளிகளே விசாரித்துத் தண்டித்து வருகின்றனர்.

**வடகிழக்கு மாநில வீதிகளில் இறங்கினால் ராணுவத்தின் துப்பாக்கி முனையோடு மோதிக் கொள்ளாமல் யாரும் ஒரு நாளைக் கூட கழிக்க முடியாது.**

அசாமில் ''அல்பா'' போராளி இயக்கத்தைச் சேர்ந்த திகந்தா கலிதா போலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். இதை எதிர்த்து அல்பாவினால் மே 23-ந் தேதியன்று நடத்தப் பெற்ற கடையடைப்பு போராட்டம் அசாமின் காமரூப் மாவட்டத்தில் மிகப் பெரும் வெற்றியடைந்தது. மேலும் அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியும் (அல்பா), மணிப்பூரின் மக்கள் விடுதலை இராணுவமும் மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையை ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறி வருகின்றன. எனினும் சில போராளி குழுக்களின் குட்டி முதலாளித்துவத் தலைமை காரணமாக அவை ஆளும் வர்க்கங்களின் சூழ்ச்சிக்குப் பலியாகி இன - குழு மோதல்களை உருவாக்கி வருகின்றன.

சுய தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதும், தேசிய இனங்களுக்கான சுய நிர்ணய உரிமையும், பல்வேறு இனக் குழுக்களுக்கான சுயாட்சி பிரதேச ஆட்சியுரிமைகளை வழங்குவதும்தான் வடகிழக்கிந்திய பிரச்னைக்கான தீர்வாகும். அம்மக்களின் போராட்டங்களின் நியாயத்தை இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் உழைக்கும் மக்களிடம் பிரச்சாரமாக எடுத்துச் செல்வதும், இராணுவத்தையும் துணை இராணுவப் படைகளையும் திரும்பப் பெறக் கோரும் போராட்டங்களைக் கட்டியமைப்பதும் புரட்சிகர ஜனநாயக சக்திகளின் முன்னுள்ள உடனடிக் கடமையாகும்.

● ரஹீம்



www.padippakam.com
படிப்பகம்

# நேபாளம்: குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டி குப்புற விழுந்த போலிகள்

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் முதன்முதலாக பதவிக்கு வந்த போலி கம்யூனிஸ்டுகளின் ஆட்சி, ஆறு மாதங்களுக்குள் அற்பாயுசில் முடிந்துள்ளது. எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர் கொள்ள முடியாத நிலையில், நாடாளுமன்றத்தில் சிறுபான்மையாக உள்ள போலிகளின் அமைச்சரவை பதவி விலகியதையடுத்து, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு வரும் நவம்பரில் மீண்டும் பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

கடந்த நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 205 இடங்களில் நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) 88 இடங்களிலும் நேபாள காங்கிரசு 83 இடங்களிலும் வெற்றி பெற்றன. மன்னராட்சியை ஆதரிக்கும் பிரஜா தந்திரக் கட்சி 20 இடங்களில் வெற்றி பெற்று புதிய சக்தியாக எழுந்தது.

எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத தொங்கு நிலையில் அதிக இடங்களைப் பெற்ற போலி கம்யூனிஸ்டுகள் சிறுபான்மை ஆட்சியை அமைத்தனர். மன்மோகன் அதிகாரியைப் பிரதமராகக் கொண்ட போலிகளின் புதிய அமைச்சரவை பதவியேற்றது. இச்சிறுபான்மை அரசுக்கு வெளியிலிருந்து நிபந்தனைக்குட்பட்ட ஆதரவு தருவதாக எதிர்க்கட்சிகள் உறுதியளித்தன. நித்திய கண்டம்; பூரண ஆயுசு என்கிற நிலையிலே இப்புதிய ஆட்சி நீடித்தது.

மூன்றில் இருபங்கு பெரும்பான்மை இல்லாத நிலையில் போலிகளால் உறுதியாக எந்தவொரு கொள்கை முடிவையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வீடும், கறவை மாடும் தருவதாக தேர்தல் வாக்குறுதி அளித்ததைக் கூட நிறைவேற்ற முடியவில்லை. எதிர்த் தரப்பினரை அனுசரித்து நடந்து கொண்ட ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே அவர்கள் குறியாக இருந்தனர். இதுதவிர பெருகிவரும் பணவீக்கம், விலையேற்றம், ஊழல் காரணமாக மக்களிடம் நிலவிய அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்க்கட்சிகள் போலிகளின் சிறுபான்மை அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக எச்சரிக்கத் தொடங்கின. அதன் உச்சகட்டமாக எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து இச்சிறுபான்மை அரசுக்கு எதிராக ஜூன் 16 அன்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக அறிவித்தன. அதை எதிர்கொள்ள முடியாத நிலையில் போலி கம்யூனிஸ்டு பிரதமர் மன்மோகன் அதிகாரி தனது அமைச்சரவை பதவி விலகுவதாக அறிவித்து, மன்னரிடம் மீண்டும் புதிதாக பொதுத் தேர்தலை நடத்துமாறு கோரினார். அதன்படியே மன்னரும் தனது அதிகாரத்தைக் கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து வரும் நவம்பரில் தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால அரசின் பிரதமராக மன்மோகன் அதிகாரியை நியமித்துள்ளார்.

போலி கம்யூனிஸ்டுகள் பதவி விலகியதும், கூட்டணி அரசு அமைக்க தாங்கள் முன்வருவதாக நேபாள காங்கிரசும் பிரஜா தந்திரக் கட்சியும் கோரியதை மன்னர் ஏற்கவில்லை. புதிய அரசியல் சட்ட விதிகளின்படி இதை ஏற்க முடியாது என்றார். உண்மையில் சட்டவிதிகள் எதுவும் அப்படிக் கறாராக இல்லை. மேலும், எதிர்க்கட்சிகள் மன்னருக்குச் சாதகமானவைதான். ஆனாலும் எதிர்க்கட்சிகள் கூட்டணி அரசு அமைப்பதை மன்னர் விரும்பாததற்கு வேறொரு காரணம் உள்ளது.

ஏழை நாடான நேபாளத்தில், நாடாளுமன்ற ஆட்சி முறை வந்த பிறகு எந்தக் கட்சியும் நிலையான ஆட்சி அமைக்க முடியவில்லை. மூன்றாண்டு காலத்திற்குள் மூன்றாவது முறையாக பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்நிலைமையைக் காட்டி நாடாளுமன்ற பல கட்சி ஆட்சிமுறையால் எதையும் சாதிக்க முடியாது. மன்னராட்சி முறையே இதைவிட மேலானது என்ற கருத்தை மக்களிடம் பரப்பும் நோக்கத்துடன்தான் மன்னர் பிரேந்திரா காய்களை நகர்த்துகிறார். திரிசங்கு நிலையில் நாடாளுமன்ற ஆட்சி முறை மாட்டிக் கொண்டதும் அரசியல் சட்டவிதிகளை வளைத்து முறுக்கித் தனது அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுகிறார். தனது தயவு இல்லாமல் எதையும் செய்ய முடியாது என்பதை நிலைநாட்டும் ஏற்பாடுதான் இது. சுருக்கமாகச் சொன்னால், நேபாளத்தில் இன்று மன்னர் பிரேந்திரா தான் சர்வ வல்லமை பெற்றவராக உள்ளார்.

நேபாள போலிக் கம்யூனிஸ்டு பிரதமர் மன்மோகன் அதிகாரி



மன்னராட்சி முறைக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய போலி கம்யூனிஸ்டுகளோ, தங்களது ஆட்சிக் காலத்தில் மன்னரது அதிகாரங்களைத் தகர்த்து ஜனநாயகத்துக்கான அரசியலமைப்பை உருவாக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மன்னராட்சிக்கு அடித்தளமாக உள்ள நிலப்பிரபுக்களான ராணாக்களின் பஞ்சாயத்து ஆட்சிமுறையை சிறிதும் அசைக்காத இன்றைய அரசியலமைப்பு முறைக்கு உட்பட்டுச் செயல்படுவதாகத் தான் போலிகள் பதவிப் பிரமாணம் ஏற்றனர். மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக நடந்த நேபாள மக்களின் ஜனநாயக இயக்கத்தை ஆதரித்துப் போராடிய இப்போலிகள், கடைசியில் ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்துடன்தான் இப்போராட்டத்தை நடத்தியுள்ளார்கள் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

இதேபோல, இந்திய மேலாதிக்கத்தை முறியடிப்பதே எங்கள் லட்சியம் என்றும், 1950-ம் ஆண்டில் போடப்பட்ட இந்திய - நேபாள ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம் என்றும் முழங்கிய இப்போலிகள் பதவிக்கு வந்ததும் இதைக் கிடப்பில் போட்டுவிட்டு சமரசமாகிப் போனார்கள். அந்நிய ஏகாதிபத்தியங்களை விரட்டுவோம் என்று முழங்கிய இப்போலிகள், பதவிக்கு வந்ததும் முந்தைய அரசு பின்பற்றிய நாட்டை வேட்டைக்காடாக்கும் அதே கொள்கைகளைத் தான் விசுவாசமாக நடைமுறைப்படுத்தினர். இந்தியப் போலி கம்யூனிஸ்டுகளின் வழியில், புரட்சியைப் பூசையறையில் வைப்பது, ராஜாங்க கம்யூனிஸ்டுகளாக மாறி சில்லறை சீர்திருத்தங்கள் - நிவாரணங்கள் செய்வதையே புரட்சியாக மாய்மாலம் செய்வது, ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்துகொண்டு நிலவுகின்ற பிற்போக்கு அரசியலமைப்பைக் கட்டிக் காப்பது, அதில் ஒரு அங்கமாக மாறிச் சீரழிவது என்பதைத் தவிர நேபாள போலிக் கம்யூனிஸ்டுகள் வேறெதையும் சாதிக்கவில்லை. மன்னராட்சிக் கொடுங்கோன்மை, நாடாளுமன்ற போலி ஜனநாயகம், போலி கம்யூனிஸ்டுகளின் துரோகம் முதலான அனைத்தையும் அனுபவித்து விரக்தியடைந்துள்ள நேபாள மக்கள் இனி புரட்சிப் பாதையில் அணி திரளுவதைத் தவிர வேறுவழியுமில்லை.

● குமார்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்க

## அ.தி.மு.க.வுக்கு 'மார்க்சிஸ்டு'களின் சவால்

தனிநபர் துதியில் ஜெயாவின் அடியார்களுக்கு எள்ளளவும் தாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதைக் காட்டிக் கொண்டுள்ளார்கள் மே. வங்க 'மார்க்சிஸ்டு'கள். அம்மாநிலத்தில் 9 மற்றும் 10-ம் வகுப்புகளுக்கான பாட நூலில், ''ஜோதிபாசு : நவீன மேற்கு வங்கத்தை உருவாக்கியவர்'' எனும் தலைப்பில் ஒரு பாடத்தினை இவ்வருடத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது அம்மாநில கல்வி வாரியம். இப்பாடத்தில், நவீன மேற்கு வங்கத்தை உருவாக்க ஜோதிபாசு அளப்பரிய தியாகங்களைச் செய்திருப்பதாகவும், அடக்குமுறைகளைச் சந்தித்திருப்பதாகவும் கதை அளந்திருப்பதோடு, ''ஜோதிபாசு என்றாலே ஒப்புமை இல்லாதவர் என்று அர்த்தம்'' எனத் துதி பாடியிருக்கிறது போலிகளின் கும்பல்.

## வங்கிகளுக்கு பட்டை நாமம்

நமது நாட்டின் தரகு அதிகார முதலாளிகள் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய வட்டியும் அசலும் 37000 கோடி ரூபாயைத் தொட்டு விட்டது. விஜய் மல்லையா, மோடி, ஷாவாலஸ், கனோரியா போன்ற தரகு முதலாளிகள் இதில் முதலிடத்தில் உள்ளனர். இவர்களோடு பல முக்கிய அரசியல் பிரமுகர்கள், மந்திரிகளின் பெயர்களும் இப்பட்டியலில் உண்டு. சிறு விவசாயிகளின் வீடு தேடி வந்து ஜப்தி செய்து கொண்டு செல்லும் அதிகார வர்க்கம், இப்பட்டியலை வெளியிடாதவாறு இரகசியமாக வைத்திருக்கிறதாம்.

## சிங்கள இனவெறி இராணுவத்தின் நரவேட்டை

இலங்கையின் தலைநகர் கொழும்புவில் அழுகிப் போய் உருக்குலைந்த நிலையில் இருந்த 25 மனித உடல்கள் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு உடல்கள் கொழும்புவிலுள்ள ஏரியில் மிதந்து வந்ததாக அரசு அறிவித்துள்ளது. ஒரு உடல் மட்டுமே தமிழர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. மீதமுள்ளவைப் பற்றி மர்மமே நீடிக்கிறது. இதனிடையே தமிழக ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த எம்.பி.தங்கதுரை, ''மீண்டும் போர் தொடங்கிய பின் போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலர் காணாமல் போயிருப்பதாக'' சந்திரிகா அரசுக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

## அமெரிக்காவின் பிணக் கடத்தல்

அமெரிக்க அணுசக்தித் துறை 1950-களில் ''கதிரொளி நடவடிக்கை'' எனும் பெயரில் அமெரிக்காவிலும் மற்றும் சில நாடுகளின் பிணவறைகளில் இருந்து 1500 மனித உடல்களையும், அறுவை சிகிச்சையில் வெட்டியெறியப்பட்ட மனித உறுப்புகளையும் கடத்தி வந்துள்ள இரகசியம் தற்பொழுது அம்பலமாகியுள்ளது. அமெரிக்காவின் அணு பரிசோதனைக் கூடங்களிலும், அணுப் பரிசோதனையின் பொழுதும் ஏற்படும் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டு மர்மமான முறையில் இறந்து போனவர்கள் இவர்கள். இறந்து போன இந்த உடல்களை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்க அரசிடம் நஷ்ட ஈடு யாரும் கோரிவிடக் கூடாது; தனது பரிசோதனை இரகசியங்களை மூடி மறைத்து விடவுமே இக்கடத்தலில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இக்கடத்தல் பற்றி முன்னரே தெரிந்திருந்தும் கூட அமெரிக்க பத்திரிகைகள் வாய் மூடி மௌனம் சாதித்துள்ளன.

## ரௌடித்தனத்திற்கு மந்திரி பதவி பரிசு

கடந்த மே மாதம் சிவசேனாவைச் சேர்ந்த எம்.எல்.ஏ. கஜனன் கீர்த்திகர் 30 அடியாட்களுடன், பம்பாயிலுள்ள காதி வாரியத்தின் தலைமை அலுவலகத்துக்குள் நுழைந்து அங்குள்ள மாற்று தொழிற்சங்க ஊழியர்களையும் அதிகாரிகளையும் தாக்கியதோடு அந்த அலுவலகத்தின் ஒரு பகுதிக்குத் தீ வைத்து விட்டுத் தப்பி ஓடி விட்டார். அந்த ரௌடி எம்.எல்.ஏ. மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதோடு, அவனை துணை உள்துறை மந்திரியாக்கி கௌரவித்துள்ளது, பா.ஜ.க. - சிவசேனா அரசு. இது நடந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே, இக்கும்பலைச் சேர்ந்த மாதவ்ராவ் பதக், ''தான் குடித்து விட்டு கலாட்டா செய்ததை பத்திரிகையில் எழுதி அம்பலப்படுத்தியதற்காக பம்பாயில் இருந்து வெளி வரும் ''லோகமத்'' பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கியுள்ளான். இத் தாக்குதலில் நான்கு ஊழியர்கள் காயமடைந்ததோடு, அலுவலகத்தின் ஒரு பகுதி தீயில் எரிந்தும் போனது.

சிவசேனா குண்டர்களால் சூறையாடப்பட்ட ''லோகமத்'' அலுவலகம்





படிப்பகம்

www.padippakam.com

# ‘சமூகநீதி’ வெறும் சடங்குதானா?

**மக்களிடம் செல்வாக்கு செலுத்துமளவுக்கு தாங்கள் அறிவித்த கொள்கைக்காகக் கூட திராவிடக் கட்சிகள் உறுதியாகப் போராடுவதில்லை.**

இட ஒதுக்கீடு விவகாரத்தில் கடந்த ஆண்டு நடத்திய அதே கபட நாடகத்தை இப்போது மீண்டும் ஜெயா அரசு அரங்கேற்றக் கிளம்பியதும் தி.மு.க., பா.ம.க மற்றும் வாழப்பாடி தலைமையிலான காங்கிரசு ஆகிய கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஆர்ப்பாட்டங்களையும் ரயில் மறியல் போராட்டத்தையும் நடத்தியுள்ளன.

கடந்த ஆண்டு வழக்கறிஞர் விஜயன் என்பவர் தமிழக அரசின் 69% இட ஒதுக்கீடு முறையை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து தமிழகத்தில் இடஒதுக்கீடு 50% -ஐத் தாண்டக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்திரவிட்டது. உச்சநீதி மன்ற உத்திரவை மீறாத அதே சமயம், பிற்பட்ட - தாழ்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்படாமல் அதே 69% அளவுக்கு இடஒதுக்கீடு கிடைக்க ஏற்பாடு செய்வதாக ஒரு மோசடித் திட்டத்தை ஜெயா அறிவித்தார்.

கடந்த ஆண்டைப் போலவே மீண்டும் அதே பித்தலாட்டத்தை ஜெயா கும்பல் நடைமுறைப்படுத்தக் கிளம்பியுள்ளது. கடந்த ஆண்டில் 18.7.94-ல் வெளியிடப்பட்ட மருத்துவப் படிப்பு பட்டியலில் 970 இடங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் இப்போது 12.6.95-ல் வெளியான பட்டியலில் அது 820 ஆகச் சுருங்கி விட்டது. மொத்த இடங்கள் 820 தான் என்றும் அதில் 69% இட ஒதுக்கீட்டு விகிதத்தைக் கடைபிடித்து வருவதாகவும் கூசாமல் புளுகுகிறது.

மேலும் 50 இடங்களுக்கு மேலாக உள்ள தனியார் மருத்துவ பட்ட மேற்படிப்புக் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிற் கல்வி தேர்ச்சி பட்டியல் இன்னமும் வெளியிடப்படாமலேயே உள்ளது. கல்வியில் இத்தகைய மோசடிகள் தொடர்வதோடு, தற்போது ஜெயா அரசு பின்பற்றிவரும் 50% இட ஒதுக்கீட்டின் காரணமாக ஏற்கனவே தாழ்த்தப்பட்ட - பழங்குடியினருக்கு இருந்த அரசு பதவி உயர்வில் முன்னுரிமையும், நிறைவு செய்யப்படாத பதவிகளுக்கு முன் கொண்டு செல்லுதலும் கைவிடப்பட்டுள்ளன.

இட ஒதுக்கீடு பிரச்சினையில், அந்தந்த மாநிலங்கள் ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப விகிதாச்சாரங்களை உச்சவரம்பு ஏதுமின்றி நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் உரிமையளித்து அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது இட ஒதுக்கீட்டை ஆதரிக்கும் கட்சிகளின் நீண்டகாலக் கோரிக்கை. ஆனால் ராவ் அரசோ தொடர்ந்து இக்கோரிக்கையைப் புறக்கணித்து வருகிறது. மத்திய அரசை நிர்பந்தித்து இக்கோரிக்கையை நிறைவேற்ற ‘சமூக நீதி காத்த வீராங்கனை’ ஜெயா எந்த முயற்சியும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக, போராட்டத்தில் இறங்கியுள்ள எதிர்க்கட்சியினரை ஆயிரக்கணக்கில் கைது செய்தும் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தியும் அடக்குமுறையை ஏவிவிட்டுள்ளது.

இட ஒதுக்கீடு விவகாரத்தில் காங்கிரசு பாரதீய ஜனதா, சிவசேனா, அ.தி.மு.க; மார்க்சிஸ்டு ஆகிய கட்சிகளுக்கிடையே அடிப்படையில் வேறுபாடு எதுவும் கிடையாது. சிவசேனா வெளிப்படையாக இடஒதுக்கீட்டை எதிர்க்கும் அதேசமயம் மற்றவை ஆதரிப்பது போல் நாடகமாடுகின்றன. மார்க்சிஸ்டுகளோ, ‘‘போராட்டம் தேவையற்றது’’ என்று அறிவுரை கூறுகின்றனர். ஜெயா கும்பலுக்கு வெண்சாமரம் வீசும் தி.க.வின் வீரமணி, போராட்டத்தை கொச்சைப்படுத்தி அவதூறு செய்து வருகிறார். கடந்த ஆண்டு இடஒதுக்கீட்டுக்காக டெல்லி வரை சென்று போராட்டம் நடத்திய வை.கோ.வின் ம.தி.மு.க. இம்முறை ஒதுங்கியே நிற்கிறது. தாழ்த்தப்பட்ட பிற்பட்டவர்களின் ஓட்டு வங்கியை இழந்து விடாதிருக்க; இடஒதுக்கீடு விவகாரத்தில் ஜெயா கும்பலை எதிர்ப்பதாக தமிழக காங்கிரசு, சுப்பிரமணிய சாமியின் கட்சி, திருநாவுக்கரசு கட்சி ஆகியன உண்ணா விரதப் போராட்ட நாடகத்தை நடத்தியுள்ளன. ஜனதா தளமோ கடைசி நேரத்தில் ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்காமல் சந்தர்ப்பவாத ‘‘பல்டி’’ அடித்தது.

இட ஒதுக்கீடு என்பது தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதியினர் கல்வியிலும் அரசு வேலைவாய்ப்பிலும் சலுகை பெறுவதற்காக சட்டப்படி அளிக்கப்பட்டுள்ள ஓர் உரிமை. ஆனால் அந்த உரிமையையும் தட்டிப் பறிப்பதே பார்ப்பன ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது. மத்திய, மாநில அரசுகள் கல்வியை மேலும் மேலும் தனியாருக்குத் திறந்து விடுவதும், ஆரம்பக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுதோறும் குறைத்து வருவதும் தான் இங்கு நடக்கிறது. இதே போல, அரசுத் துறை ஆலைகள் தனியாருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்படுவதும், நவீனமயம் காரணமாக ஊழியர்கள் வெளியேற்றப்படுவதும் தான் நடக்கிறது. ஜெயா அரசோ ஆரம்பப் பள்ளிகளைப் புறக்கணித்து விட்டு தனியார் கான்வென்ட் பள்ளிகளை ஊக்குவிக்கிறது. மேலும் அரசு வேலைக்கு ஆளெடுப்பதை தடுக்க சட்டமே கொண்டு வந்துள்ளது. இந்நிலையில் இடஒதுக்கீட்டிற்கான வாய்ப்பே சுருங்கிப் போய் கேள்விக் குறியாகிவிட்டது.

மேலும், இட ஒதுக்கீட்டினால் ஆதாயமடைந்து வருவது தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட சாதிகளிலேயே உள்ள மேட்டுக்குடி பிரிவினர் தான். வறுமையின் காரணமாக ஆரம்பக் கல்வியைக் கூட தொடர முடியாத நிலையில் தான் தாழ்த்தப்பட்ட - பிற்பட்டசாதிகளின் ஏழைகள் உள்ளனர். இந்நிலையில், அவர்களால் உயர்கல்வியைப் பற்றி கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. தப்பித் தவறி ஓரிருவர் உயர்கல்வி படிக்க வந்தாலும் தனியார் கல்லூரிகளின் நன்கொடை - கட்டணக் கொள்ளையால் படிப்பைத் தொடர முடியாமல் தத்தளிக்கிறார்கள். கடந்த ஆண்டு மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தருமபுரியைச் சேர்ந்த சசிகலா என்ற தாழ்த்தப்பட்ட ஏழை மாணவி, நன்கொடை — கட்டணக் கொள்ளையால் சாராய உடையாரின் ராமசந்திரா மருத்துவ கல்லூரியில் சேர முடியவில்லை. ஓராண்டு காலம் பாழான பின் இப்போது தான் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இட ஒதுக்கீட்டு உரிமையை நிலைநாட்டப் போராடும் தி.மு.க., பா.ம.க ஆகிய கட்சிகள் மேற்கூறிய அவலங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில்லை. மக்களிடம் செல்வாக்கு செலுத்துமளவுக்கு தாங்கள் அறிவித்துக் கொண்டுள்ள கொள்கைக்காகக் கூட உறுதியாகப் போராடாமல் இக்கட்சிகள் பலவீனப்பட்டுப் போயுள்ளன. சமூக நீதிக்காகப் போராடும் கட்சிகள் இத்தவறான போக்குகளை மாற்றிக் கொள்ளாதவரை, அவர்களால் தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களின் முழுமையான ஆதரவை ஒருபோதும் பெற முடியாது. ஜெயா அரசை எதிர்த்து ஆண்டுதோறும் வழக்கமாக நடத்தும் ஒரு சடங்காக இப்போராட்டம் ஆதரவின்றி சுருங்கிப் போவதை தடுத்திடவும் முடியாது.

● மனோகரன்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

படத்தைப் பார்த்தவுடனேயே புரிந்து கொள்ளலாம் எவ்வளவு கொடிய குடிநீர்ப் பஞ்சம் இம் மக்களை வாட்டி வதைக்கிறதென்று. நாட்டிலேயே தொழிற்துறை முதலிடத்தில் உள்ளதென்று பீற்றிக் கொள்ளப்படும் மகாரஷ்டிராவில் தான் இந்த அவல நிலை. ஏதோ ஒன்றிரண்டு கிராமங்களில் அல்ல. அம் மாநிலத்தின் 14 மாவட்டங்களில் நகரம் கிராமம் எங்கிலும் கிணறுகள் வற்றி வறண்டு போய்க் கிடக்கின்றன. அரசாங்கம் போட்ட குழாய்களிலோ காற்றைத் தவிர வேறு எதுவும் வந்ததாக வரலாறே இல்லை. கிணற்றுப் பக்கம் குழந்தைகளை விடவே அஞ்சுவார்கள் நமது தாய்மார்கள். ஆனால் இங்கோ கிணற்றுள் அடி ஆழத்தில் கலங்கிக் கிடக்கும் தண்ணீரை எடுக்க குழந்தைகளின் இடுப்பில் கயிற்றைக் கட்டி இறக்கி விடுகிறார்கள். காலை தொடங்கி சில நாட்களில் மாலை வரை தண்ணீர் தேடி அலையும் இக் கொடுமையைச் சகிக்க முடியாது. சுரண்சுராடி என்ற கிராமத்தில் இரு பெண்கள் தற்கொலை செய்து கொண்டு விட்டார்கள். வயல்கள் பாளமாய் வெடித்துக் கிடக்க, ஆடு - மாடுகளை சந்தையில் விற்றுவிட்டு வேலை தேடி பம்பாய்க்கும் பூனாவுக்கும் ஓடுகிறார்கள் கிராமத்து விவசாயிகள்.



இதோ காங்கிரசு கட்சியை சேர்ந்த பம்பாய் நகர மேயர் அதிகார வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டு வருண பகவானை மனமிரங்கி அருள் புரிய வேண்டும் காட்சியிது. நான்கு வருடங்களாகி ''நவீன மயம்' என உரத்து ஊளையிடும் காங்கிரசு கட்சி மக்களை ஏய்க்க நடத்தும் மோசடி நாடகமிது. சிவசேனா தலைவர் தாக்கரே, ''இந்துஜாவின் முதலீட்டை விட மக்களின் குடிநீர்ப் பிரச்சனைதான் முக்கியமானது'' என வீர வசனம் பேசினார். ''கரும்பு பயிரிடும் பணக்கார விவசாயிகள் நிலத்தடி நீரை உறிஞ்சி விடுவது தான் குடிநீர்ப் பஞ்சத்துக்குக் காரணம்'' எனச் சுட்டிக் காட்டினார்கள் வல்லுநர்கள். அதைக் கட்டுப்படுத்த துப்பில்லாத ஆளும் பா.ஜ.க., சிவசேனா கும்பல் அப்பண முதலைகளை காங்கிரசிடமிருந்து தன் வசம் இழுத்துக் கொள்ளத்தான் திட்டம் தீட்டியது. லாரியின் மூலம் குடிநீர் என இலஞ்சத்திலும் மூழ்கித் திளைக்கிறது.

''நாட்டை முன்னேற்ற உங்களை நரபலியாகத் தாருங்கள்'' என்கிறார்கள் இந்த நவீன பூசாரிகள். நாற்பதாண்டுகளுக்கு மேலாக உழைக்கும் மக்களின் நலனுக்காக ஒரு துரும்பைக் கூட நகர்த்தாத இந்த ஓட்டுக் கட்சிகளையா இனியும் நம்பி ஏமாறுவது? வறண்டு போன அக்கிணறுகளில் இவர்களை உதைத்துத் தள்ளி சமாதி எழுப்பும் போதுதான் நமது வாழ்க்கை மலரும்.

படிப்பகம்